வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 06.09.2021 திங்கட்கிழமை | இதழ் : 275 | பக்கங்கள் : 16




# ஜெனிவா தீர்மான விடயங்கள் அதிகமானவை நிறைவேறின!

## அரசாங்கம் ஐ.நா.வுக்கு 13 பக்க ஆவணம்

கொழும்பு, செப்ரெம்பர் 06,

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 13ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் 13 பக்க ஆவணம் ஒன்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸினால் ஐ.நா.வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.**



மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பெரும்பாலான விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வின் இலங்கைக்கான பிரதிநிதி ஹனா சிங்கர் மூலமாக இந்த ஆவணம் அமைச்சர் பீரிஸினால் கையளிக்கப்பட்டது.

“ஜெனிவா தீர்மானத்தின் பெரும்பாலான விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அல்லது நிறைவடையும் நிலையில் உள்ளன” என இந்த ஆவணத் தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளுக்கும், ஜெனிவாவைத் தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், நிலைமாறு கால நீதி, பொறுப்புக்கூறல்,

15

## 3,308 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, செப். 06

நாட்டில் நேற்று 3 ஆயிரத்து 308 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 62 ஆயிரத்து 767 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 2 ஆயிரத்து 81 பேர் குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 84 ஆயிரத்து 557 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## இன்று எம்.பி.க்களுக்கு கொரோனா பரிசோதனை

கொழும்பு, செப். 06,

இன்று திங்கட்கிழமை பாராளுமன்ற அமர்வில் பங்கேற்கும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்போது, பாராளுமன்ற பணியாளர்கள் மற்றும் பாராளுமன்ற அமர்வுகளில்

15




பிரசித்திபெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலய தேர்திருவிழா நேற்று ஆலயத்தின் உள்ளே இடம்பெற்றது.

### போதனா மருத்துவமனை ஆய்வக முடிவில்

## வடக்கில் 63 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், செப். 06

யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று 320 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் 10 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ். போதனா மருத்துவமனையில் 9 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனியில் 2 பேர், நொதேர்ன் தனியார் மருத்துவமனையில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார மருத் துவமனையில்

15

### கூட்டமைப்புக்குள் பிளவு செய்தி

## உண்மையில் நடந்தவை என்ன? மக்களுக்கு விளக்க வேண்டும்!

### தமிழ் அரசின் அரசியல் குழுகூடி முடிவு

யாழ்ப்பாணம், செப். 06

ஜெனிவா விவகாரத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ள நிலையில், உண்மையில் நடந்தது என்ன என்ற விடயத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி தமிழ் மக்களுக்கு விளக்க வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்று அவசரமாகக் கூடி முடிவெடுத்துள்ளது.

ஜெனிவாவில் நடை

15

## 10 ஆயிரத்தைத் தாண்டியது மொத்த மரண எண்ணிக்கை

கொழும்பு, செப். 06

நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் 189 பேர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன அறிவித்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த வர்களில் 96 ஆண்களும், 93 பெண்களும் அடங்குகின்றனர்

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 140 ஆக அதிகரித்துள்ளது. (இ)



## ஜோர்ஜ் மாஸ்ரர் காலமானார்

யாழ்ப்பாணம், செப். 06

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை பிரதான மொழிப்பெயர்ப்பாளராக விளங்கிவந்த ஜோர்ஜ் மாஸ்ரர் அல்லது தம்பி அப்பா என்றழைக்கப்

15

## பருப்பு விலை உயர்வு

கொழும்பு, செப். 06

ஒரு கிலோ பருப்பின் விலை 30 முதல் 40 ரூபா வரை உயர்த்தப்பட்டுள்ளது எனக் நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் தெரிவிகின்றனர்.

சந்தையில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு

15



## இப்படியும் நடக்கிறது...!

அறிஞர்கள் கூடியிருந்த ஒரு சபையில், "மிகவும் பயனுடையது எது சூரியனா அல்லது சந்திரனா?" என்பது குறித்துப் பட்டிமன்றம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

அங்கே பேசியவர்கள் பெரும்பான்மையினர் சந்திரனைவிட சூரியனால்தான் உலகத்திற்கு அதிக பயன் உண்டு என்ற கருத்தையே வலியுறுத்திப் பேசினர். அப்போது பேசியவர்களை கேலி செய்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்று பார்வையாளர்களில் ஒருவருக்குத் தோன்றியது.

அவர் உடனே எழுந்து "அறிஞர் பெருமக்களே, இங்கே நடந்த பட்டிமன்றம் தொடர்பாக எனது கருத்தைக் கூறலாமா?", என்று கேட்டார்.

"இது பொதுமன்றம், இங்கு யாரும் தங்கள் கருத்தினை எந்த விதத் தடையுன்றிக் கூறலாம். உங்கள் கருத்தைக் கூறுங்கள்" என்று அறிஞர்கள் கூறினர்.

"சூரியனைவிடச் சந்திரனால்தான் உலத்திற்கு அதிகமான பயன் கிடைக்கிறது என்று நான் கருதுகிறேன்" என்றார் அவர்.

"அது எவ்வாறு விளக்குங்கள்", என்று அறிஞர்கள் கேட்டனர்.

"பகலில் நமக்கு இயற்கையாக வெளிச்சம் இருக்கிறது. அதனால் சூரியனுடைய உதவி நமக்குத் தேவையே இல்லை. இரவில் இருளாக இருக்கிறது. சந்திரன் இருளை அகற்றி நமக்குத் தேவையான ஒளியை இரவிலே அளிக்கிறது. அதனால் சந்திரன்தான் நமக்கு அதிக பயனை அளிக்கின்றது", என்றார் அவர்.

இவர் தங்களை கேலி செய்கிறார் என்பதை உணர்ந்து அறிஞர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள்.

அண்மையில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தனது இல்லத்தில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார்.

அப்போது ஊடகவியலாளர்கள், கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சி தனித்தும் மற்றயை கட்சிகள் தனியாகவும் செயல்படப் போகின்றன என்று கூறப்படுகிறதே என்று அவரிடம் கேட்டனர்.

அதற்கு அவர் அளித்த பதில் இதுதான்.

"....இது ஒரு பொறுப்பற்ற ரீதியிலான பிரசாரம். நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாக பிளவுபட்டு தனித்தனி கட்சிகளாக செயல்படுவது எங்களை பலவீனப் படுத்திவிடும். எங்களுடைய இலக்கை அடைய முடியாது. கொரோனா நேரத்தில் இவ்வாறான கருத்துக்களுக்கு இடமளிக்கக்கூடாது...."

மாவை ஐயா என்ன பதில் சொன்னார் என்பது அங்கிருந்த ஊடகவியலாளர்களுக்குப் புரிந்திருக்குமோ தெரியவில்லை. அவ்வாறு கூறப்படுவது பொய்யான பிரசாரம் என்று சொல்லும் அவரே, தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாக பிளவுபட்டு தனித்துக் கட்சிகளாக செயல்படுவது எங்களை பலவீனப்படுத்திவிடும் என்றும் சொல்கிறார். அவர் சொல்வதுசரி, அது என்ன கொரோனா நேரத்தில் இவ்வாறான கருத்துக்களுக்கு இடமளிக்கக்கூடாது? ஒன்றும் புரியவில்லை.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிராக கடந்த பேரவை கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றம் குறித்து ஆணையாளர் தனது அவதானங்களை வெளியிடவிருக்கிறார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள மாவை ஐயா, தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளும் ஒன்றுபட்டு மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு பின்னர் நடைபெறுகின்ற இலங்கை அரசாங்கத்தின் செயல்பாடுகள் தொடர்பாக எங்கள் மதிப்பீட்டை நாங்கள் அனுப்ப வேண்டும். இது தொடர்பாக இரண்டு விதமான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. ஒன்று கட்சிகள் மத்தியில் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை அனுப்பி வைப்பது, இரண்டாவது பொது அமைப்புகளிடம் இருந்து கிடைக்கின்ற தகவல்கள் தயாரிப்புகளை மையமாக வைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைவர் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை அனுப்பி வைப்பது என்பனவாகும். அநேகமாக அந்த அறிக்கை இன்று (நேற்று) நண்பகலுக்கு முன்பு உருவாக்கப்பட்டிருக்கும்.

இதுதான் மாவை ஐயா அங்கு தெரிவித்தவை.

ஜெனிவாவில் செப்ரெம்பர் மாதம் கூட்டத்தொடர் தொடங்கும் என்பதும், அங்கு ஆணையாளர் தனது அவதானிப்புக்களை வெளியிடுவார் என்பதும் ஏற்கனவே தெரிந்த சங்கதிகள். ஆனால், அது குறித்து இன்னமும் தமிழ் கட்சிகளிடையே ஒரு தெளிவான முடிவு எடுக்கப்படவில்லை என்பதையும் மாவை வெளிச்சம் போட்டுக்காட்டியிருக்கிறார்.

மேலே கூறிய பட்டிமன்றத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள வித்தியாசம் குறித்து கேலிசெய்த அந்த நபர் போல மாவை ஐயா சொல்லவில்லை என்று நம்புவோம்.!

மாவையின் செய்தியைப் படித்ததும் மனதில் எழுந்ததை நேற்று முன்தினமே எழுதி முடித்திருந்தேன். ஆனால், நேற்றைய செய்திகள் இதைவிட அதிர்ச்சியாக இருந்தன. அதுபற்றி நாளை பார்ப்போம்.

**- ஊர்க்குருவி**

# ரஷ்யா, உக்ரைனிலிருந்து சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்துவர விசேட வேலைத்திட்டம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்

கொழும்பு, செப். 06

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் அரசின் திட்டத்தின் கீழ் ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் சுற்றுலா மேம்பாட்டு முயற்சிகளை ஆரம்பித்துள்ளதாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அண்மைய காலங்களில் அதிகமாக இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் முதல் 10 நாடுகளில் ரஷ்யாவும், உக்ரைனும் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனாத் தொற்று காலப்பகுதியில் உக்ரைன் மற்றும் கஸகஸ்தானில் இருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் திட்டத்தை இலங்கை செயற்படுத்தியது. இதன்மூலம் கடந்த காலங்களில் 24 ஆயிரத்து 320 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில் 250 சுற்றுலாப் பயணிகள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமாத்திரமின்றி, கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட சுமார் 150 பேர் முழுமையாகக் குணமடைந்த பின்னர் தங்கள் நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதேவேளை, இன்னும் 100 சுற்றுலாப் பயணிகள் நாட்டில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி முதல் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

அவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும்" - என்றார்.

(இ)

## நாதஸ்வர வித்வான் அளவெட்டி எஸ். சிதம்பரநாதன் காலமானார்



யாழ்ப்பாணம்,செப்.5

நாதஸ்வர வித்வான் அளவெட்டி எஸ். சிதம்பரநாதன், அவரது 77ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இலங்கையின் ஒரு தலைமுறைக் கலைஞர்களில் பிரபலம் பெற்ற ஒருவராக திகழ்ந்த சிதம்பரநாதன், தனக்கென்று ஒரு தனித்துவத்துடன் தனது வாசிப்பில் அபிமானத்தைப் பெற்றவர்.

'நாதஸ்வர இளந்தென்றல்' என்று இளமைக் காலத்திலேயே கௌரவம் பெற்ற இவர், இலங்கை அரசின் 'கலைமாமணி', 'கலாபூஷணம்' உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

இந்தியா உள்பட, பல உலக நாடுகளிலும் புகழ்பெற்ற சிதம்பரநாதன், அங்கும் பல கௌரவங்களை பெற்றுள்ளார்.

### கல்வி tv CHANNEL-1

**06.09.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**06.09.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
06.09.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆவணி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# மீண்டும் தமிழ் வேதாளம்?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு கூட்டமைப்பை சேர்ந்த கட்சிகள் இரண்டு கடிதங்களை அனுப்பிவைத்திருக்கின்றன. அண்மையில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் இணைய வழியில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இந்த சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தவிர ஏனையவர்கள் அனைவரும் பங்குகொண்டிருந்தனர். பொதுவான விடயங்களில் இணைந்து செயல்படுவதில் தங்களுக்கிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. இந்த சந்திப்பை முன்னின்று ஒழுங்கு செய்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ, அவ்வாறான அபிப்பிராயங்களையே ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் சந்திப்பில் இணைந்து கொண்ட கட்சிகளில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் தலைவர்களின் கையெழுத்துடன் மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், இரா. சம்பந்தனின் கையெழுத்துடன் பிறிதொரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றது. மீண்டும் தமிழ் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

தமிழ் அரசு கட்சி அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் மேலதிகமாக, தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. மிகவும் தெளிவாக மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெற்றிருக்கும் கூட்டமைப்பு என்னும் அடிப்படையிலேயே குறித்த கடிதம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், மறுபுறம், கூட்டமைப்பின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துடன், விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், சிறீகாந்தா ஆகியோரின் கையெழுத்துடன் மற்றைய கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற பேரவை அமர்வின்போது, கூட்டமைப்பு, முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியவற்றின் கையெழுத்துடன் ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடு சிவில் சமூக குழுக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், அந்த கடிதத்துடன் சிவில் சமூக குழுக்களின் தலையிடும் கதையும் முடிவுக்கு வந்துவிட்டது. இப்போது கட்சிகள் மட்டுமே தங்களுக்குள் கூடி அனைத்தையும் முடிவு செய்கின்றனர். இதற்கு சிவில் சமூக குழுக்கள் முற்றிலுமாக அதன் நம்பகத் தன்மையை இழந்துவிட்டதும் ஒரு காரணமாகும்.

தமிழ் அரசு கட்சியின் கடிதத்தில், 2009இல், மஹிந்த ராஜபக்ஷவும், ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கீமூனும் இணைந்து வெளியிட்ட, அறிக்கையிலிருந்து, தற்போதைய அவசரகால நிலைமை வரையில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறித்த கடிதத்துடன் வெரிட்டே என்னும் கொழும்பு சிந்தனை கூடத்தின் அறிக்கை ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கின்றது. அதே வேளை, 2010 ஜூனில், ஐ. நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவினால் குறிப்பிடப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் மற்றும் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்னும் வசனமும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதனை தற்போது தமிழ் அரசு கட்சியிலுள்ள சிறிதரன் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் விமர்சிக்கின்றனர். ஆனால், சிறிதரனின் பெயருடன்தான் குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் தமிழ் அரசு கட்சியிலுள்ளவர்களுடன்கூட இந்த விடயம் கலந்துரையாடப்படவில்லையா என்னும் கேள்வி எழுகின்றது.

நிபுணர் குழு அறிக்கையில் விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால், அதனை இப்போது குறிப்பிடாமல்கூட, கடிதத்தை அனுப்பலாம் என்பது ஏனையவர்களின் வாதமாக இருக்கின்றது. அதேவேளை, ஏனையவர்கள் இணைந்து அனுப்பியிருக்கும் கடிதத்தில், கடந்த மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்திற்குபின்னரான நிலைமைகள் தொடர்பிலும், வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் பல்வேறு உரிமைகள் மீறல் விவகாரங்கள் தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

கேள்வி இதனை ஏன் அனைவரும் ஒன்றாக இணைந்து முன்வைக்க முடியாமல் போனது? ஏன் தொடர்ந்தும் தமிழ்த் தேசியம் பேசுவோர் தமிழர் அரசியலை நகைச்சுவையாக்கிக் கொண்டிருக்கின்றனர்? இதன் உண்மையான பின்னணி என்ன? சம்பந்தன், சுமந்திரன் தனியாக செயல்படுகின்றனர் என்றால் தற்போது தனியாக கடிதம் அனுப்பியிருப்பவர்கள் அடுத்த தேர்தலில் 'வீடு' சின்னத்தின் கீழ் போட்டியிடமாட்டார்களா?

# "இறைவனாலும் தமிழ் மக்களை காப்பாற்ற முடியாத நிலை"!

**- அலசுவது இராஜதந்திரி -**

*"இலங்கையில் தமிழர்களை இனி இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று மறைந்த தமிழ் அரசுக் கட்சி தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டவை வடக்கு - கிழக்கு அரசியலைப் பொறுத்த வரை எக்காலத்துக்கும் பொருத்தமான தாகவே இருக்கின்றது.*

*ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு வாரகாலம் இருக்கும் தறுவாயில் அந்தக் கூட்டத்தொடருக்கு இலங்கையின் வடக்கு - கிழக்கு அரசியல் தரப்பின் நிலைப்பாட்டை ஒரே அணியாக முன்வைக்க முடியாது 'தட்டுத்தடுமாறி' நிலை தளர்ந்து போயுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு - கிழக்கின் ஏனைய கட்சிகளும் இருக்கின்றன. உள்நாட்டில் ஒற்றுமை பேணி ஒரே அணியாக நின்று வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்தும் மனிதாபிமான பிரச்னைகள் தொடர்பிலும் ஆக்கபூர்வமாக எதனையும் செய்ய முடியாத தமிழ் அரசியல் தரப்பினர் தற்போது சர்வதேச அரங்கிலும் தமது 'கேலிக் கூத்தை' காண்பித்துள்ளனர்.*

*சர்வதேச அரசியலாளர்களும், இராஜதந்திரிகளும் இலங்கை அரசியல் குறித்தும் வடக்கு - கிழக்கு அரசியல் நிலவரங்கள் குறித்தும் நன்கறிந்து வைத்திருக்கக் காணப்படுகின்றனர்.*

**தோல்வி மேல் தோல்விகள்**

*1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டபோது அதனை அனைத்து தமிழ் அரசியல் தரப்பினரும் முழுமனதோடு ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. இணைந்த வடக்கு - கிழக்கில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்குமேயானால், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு சமஷ்டி அமைப்பை தழுவியதாக அரசியல் ரீதியாகவும் பலமடைந்திருக்க முடியும். ஆனால், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை முறைமையை தோல்வி காண வைத்து பின்னர் 2002ஆம் ஆண்டில் நோர்வேயின் அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளையும் புறந்தள்ளியதே வரலாறாக இருக்கின்றது.*

*தற்போது, கொடிய யுத்தத்துக்குப் பின்னரான சூழ்நிலையில்கூட ஒரு முக்கிய சர்வதேச நிறுவனமான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகள் பேரவையில் ஒரே குரலில் எண்ணிலடங்காத வடக்கு - கிழக்கின் மனித அவலங்களை எடுத்துக்கூறுவதில் ஒற்றுமை பேண முடியாதவர்கள் தம்மை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு அரசியல் நடத்துவதே வேதனைக்குரியதாக இருக்கின்றது.*

*தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தள்ளாட்டமான ஒரு போக்கைக்கண்டு அதிலிருந்த அரசியல் கட்சிகளின் வெளியேற்றங்களோடு பின்னடைவைக் கண்டுள்ளது. இதன்மூலம் தென்னிலங்கை அரசியலாளர்களுக்கு தமிழ் அரசியல் தரப்பு ஒருபோதும் ஒற்றுமையாக இருக்கப் போவதில்லை என்ற 'நல்ல செய்தி' யையும் வழங்கியுள்ளனர்.*

*சுதந்திர இலங்கையில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் மற்றும் ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றோரின் காலத்தில் ஆரம்பித்த ஒற்றுமையீனம் தற்போது இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளை தாண்டிய பின்னரும் தொடருவதே தமிழ் மக்களின் எதிர்காலத்தை கேள்விக்கு உரியதாக்கிவிட்டுள்ளது.*

*இதன்பின்னர் தீவிரவாதமாக தமிழ் அரசியல் நிலவரம் மாற்றம் கண்டபோது தோன்றிய வேற்றுமைகள் ஆயுதப்போராட்டத்தையே வேரறுத்து விட்டிருந்து.*

**எண்ணிலடங்கா இன்னல்கள்**

*இதனால், வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்கள் எண்ணிலடங்காதவை. இதேவேளை, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் இடம்பெறுவதற்கு இன்னும் ஒரு வாரகாலமே இருக்கின்ற நிலையில் தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமையின்மை கவலைக்குரிய விதத்தில் வெளிப்பட்டுள்ளது.*

*இத்தகைய ஒற்றுமையீனம் மூலம் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பு சர்வதேச சமூகத்தையே குழப்பத்தில் ஆழ்த்திவிட்டுள்ளது. இந்தத் தடவைகூட்டாக ஓர் அறிக்கையை தயாரித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்புவதில் தமிழ் தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமைகளை நோக்கும்போது தனிப்பட்ட குரோதங்களே சகலருக்கும் பொதுவான ஒரு பிரச்னையை கையாளுவதில் சிக்கல்களை ஏற்படுத்தி விட்டுள்ளது.*

*இன்றைய தமிழ் அரசியல் தரப்பை எடுத்துக்கொண்டால் எந்த ஒரு கட்சிக்கும் பலமான நிலையை பேண முடியாத நிலையே நிலவுகின்றது. இந்நிலையில் தமிழ் கட்சிகள் தம்மிடையே அரசியல் ரீதியான வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம். ஆனால், ஜெனிவாவில் வடக்கு - கிழக்கு அரசியல் தரப்பு கையாள வேண்டிய விடயம் பொது விடயம் மனிதாபிமானப் பிரச்னையாகவே இருக்கின்றது.*

*ஆகவே, இதுவிடயத்தில் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற வகையில் ஒற்றுமை பேண வேண்டிய தருணத்தில் சர்வதேச சமூகம் முன்பாகவும் தமது மக்களுக்கு உரிய தலைமைத்துவத்தை வழங்க முடியாதவர்கள் என வெளிக்காட்டியிருப்பது, 'இறைவனாலும் தமிழ் மக்களை காப்பாற்ற முடியாது' என்ற எண்ணத்தையே வலுப்படுத்துவதாக இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 06 திங்கட்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 21
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : அமாவாசை




**மேடம்**
வேலைப்பளு அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். பல நாட்கள் சந்திக்காத நண்பர்கள் தொடர்பு கொள்வார்கள். குடும்பத்தில் ஏற்படும் சலசலப்பை புன்னகையுடன் சமாளிப்பீர்கள்.

**இடபம்**
வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த செய்தி வரும். வெளிவட்டார நட்பு விரிவடையும். கலைஞர்கள் வெற்றி பெறுவர். உழைப்பால் வென்று பாராட்டு பெற்று மகிழ்வீர்கள்.

**மிதுனம்**
எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவி கிடைத்து சமாளிப்பீர்கள். புது பங்குதாரரை இப்பேதைக்குச் சேர்க்க வேண்டாம். பணியாளர்களுக்கு திருப்தி உண்டாகும். கணவருக்கு பதவி உயரும்.

**கடகம்**
திட்டமிட்ட விஷயங்கள் தடையுடன் நடைபெறும் நாள். வருமானம் போதுமானதாக இருந்தாலும் தேவையற்ற கவலை இருக்கும். நட்பென்று நம்பியவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

**சிம்மம்**
மாற்று மருத்துவத்தால் தாயின் உடல் நலம் சீராகும். இளைஞர்கள் புதிய விஷயத்தில் செய்த முயற்சி பலன் தரும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கன்னி**
கேட்ட இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்காமலும் சமாளிப்பீர்கள். வேற்று மொழி பேசுபவர்கள் நட்பாவர்கள். கவனம் தேவை. சிலர் மீது இருந்த அபிப்ராயம் மாறும். இழந்த பொருள் கிடைக்கும்.

**துலாம்**
குழந்தைகள் பல சாதனைகள் செய்து சந்தோஷப் படுத்துவார்கள். பல காலம் ஆசைப்பட்ட விஷயம் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். மின்சாரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்**
தன்னம்பிக்கையை இழக்காமல் இருக்க முயற்சிக்க வேண்டும். பிரபலமானவர்களின் சந்திப்பு கிட்டும்போது கவனமாகப் பேசுங்கள். வளர்ச்சிக்கு தேவையான புதிய யுக்திகளை கையாளுவீர்கள்.

**தனுசு**
பூர்வீக சொத்துப் பிரச்னைகள் நல்ல முடிவிற்கு வரும். சமுதாயப்பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். நன்மைகள் கூடும். பதற்றம் காரணமாக சிரமத்துக்கு உள்ளாக வேண்டாம்.

**மகரம்**
அஜாக்கிரதை இல்லாமல் செயல்படுவது நல்லது. அவசியமற்றவர்களிடம் அநாவசியத் தகவலைப் பகிர வேண்டாம். பல கால முயற்சி லேசான வெற்றியை நோக்கிப்போகும்.

**கும்பம்**
பணியாளர்களுக்கு உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெறுவதற்கான அடையாளம் தெரியும். விலை உயர்ந்த பொருள் ஒன்றை வாங்குவீர்கள்.

**மீனம்**
உழைப்போரின் எண்ணம் ஒன்று பெருமுயற்சியால் நிறைவேறும். குடும்ப ஒற்றுமைக்கு எடுத்த முயற்சி வெற்றி பெறும். பகைவர் ஒருவர் நட்பாக வாய்ப்புண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும்.

# கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை!

## திருச்சி சிறப்பு முகாம் வாசிகள் அறிவிப்பு

சென்னை, செப் 06

கடந்த பல மாத காலமாக திருச்சி சிறப்பு முகாமில் இருந்து தங்களை விடுதலை செய்யக் கோரி நடத்தி வரும் போராட்டத்தில் இது வரையில் தமக்கு எந்த தீர்வும் கிடைக்கவில்லை என இலங்கை தமிழ் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதிலும் தமது போராட்டத்தை தீர்வு கிடைக்கும் வரை கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதன் காரணமாக தமது போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். தற்கொலை முயற்சிகள் தொடங்கி உணவு தவிர்ப்புப் போராட்டம் வரை தாம் பல வடிவங்களில் போராட்டங்களை நடத்தியுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இந்நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் இரு இலங்கைத் தமிழர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் மீதமுள்ளவர்கள் தொடர்ச்சியாக சிறப்பு முகாமில் உள்ளிருப்பு போராட்டத்தை நடத்தி வருகின்றனர் என அகதிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தமக்கான விடுதலை கிடைக்கும் வரையில் தாம் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறித்த அகதிகள் நேற்று ஊடகங்களுக் குத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இங்கு 15 ஈழத் தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்த நிலையில் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# உள்ளாட்சி தேர்தல் ஏற்பாடு தொடர்பாக தி.மு.க. நிர்வாகிகளுடன் ஸ்டாலின் பேச்சு

சென்னை, செப். 06

தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 9 மாவட்டங்களுக்கு ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடத்துவது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் திமுக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

புதிதாகப் பிரிக்கப்பட்ட வேலூர், நெல்லை, விழுப்புரம், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் விரைவில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. இம்மாவட்டங்களுக்கு வரும் 15ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை மாநிலத் தேர்தல் ஆணையம் மும்முரமாக மேற்கொண்டு வருகிறது. இதனிடையே, இந்த 9 மாவட்டங்களுக்கான வாக்காளர் பட்டியல் விவரங்களை மாநிலத் தேர்தல் ஆணையம் சமீபத்தில் வெளியிட்டது. மேலும், ஊரக உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் மாநிலத் தேர்தல் ஆணையம் இன்று ஆலோசனை நடத்த உள்ளது.

இந்த நிலையில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக



தி.மு.க. நிர்வாகிகளுடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஞாயிற்றுக்கிழமை அண்ணா அறிவாலயத்தில் ஆலோசனை நடத்தினார்.

# நலமாக இருக்கின்றேன் விஜயகாந்த் ருவிட்



சென்னை, செப். 06

டுபாயில் சிகிச்சை பெற்று வரும் தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் தான் நலமாக இருப்பதாக ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். தன்னுடைய படம் ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்று வரும் விஜயகாந்த், கடந்த வாரம் சென்னையிலிருந்து மருத்துவசிகிச்சைக்காக டுபாய் சென்றார். இந்த நிலையில், தான் நலமாக இருப்பதாக விஜயகாந்த் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"நான் நல்ல உடல் நலத்துடன் உள்ளேன். நான் நடித்த 'சத்ரியன்' திரைப்படத்தை, எனது சிகிச்சைக்கு உதவிபுரியும் செவிலியர் சகோதரிகளுடன் பார்த்த போது எடுத்த படம்" என்று அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார். கால் மேல் கால் போட்டுக் கொண்டு விஜயகாந்த் அமர்ந்திருக்கும் புகைப் படம் தற்போது சமூக வலைதளங்களில் நேற்று முதல் வைரலாகி வருகிறது.

இதேவேளை விஜயகாந்தின் மனைவி பிரேமலதா நேற்று முன்தினம் அதிகாலையில் சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து டுபாய் சென்றார். முன்னதாக அவர், கொரோனா தொற்று இல்லை என சான்று பெற்றுக் கொண்டார். விஜயகாந்துக்கு மருத்து சிகிச்சை முடிந்து இந்த மாத இறுதியில் சென்னை திரும்புவார் என கூறப்படுகிறது.

# இரண்டாவது 'டோஸ்' தடுப்பூசி கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்!

கிளிநொச்சி, செப். 06

**கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது என்று பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், புனித திரேசா பெண்கள் கல்லூரி, உருத்திரபுரம் ஆரம்ப வைத்தியசாலை, வட்டக்கச்சி மத்திய கல்லூரி, அக்கராயன் மகாவித்தியாலயம், பாரதிபுரம் மகாவித்தியாலயம், புன்னை நீராவி அ.த.க. பாடசாலை,

பிரமந்தனாறு கிராம சேவையாளர் அலுவலகம், தர்மபுரம் மத்திய கல்லூரி, கல்மடுநகர் அ.த.க. பாடசாலை, முருகானந்தா அ.த.க. பாடசாலை, பரந்தன் கிராம சேவையாளர் அலுவலகம், முழங்காவில் வைத்தியசாலை, பூநகரி வைத்தியசாலை, வேவில் வைத்தியசாலை, பளை மத்திய கல்லூரி ஆகியவற்றில் பொதுமக்கள் அருகிலுள்ள தடுப்பூசி முகாம்களில் சென்று இரண்டாவது டோஸை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், தடுப்பூசி செலுத்த செல்வோர் தடுப்பூசி அட்டைகளை எடுத்து செல்ல வேண்டும். மேலும், முகக்கவசங்களை உரிய முறையில் அணிந்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கூறியுள்ளார். (ஐ)



# ரூ. 6.8 கோடி பெறுமதியான கஞ்சா வடமராட்சி கடற்பரப்பில் சிக்கியது

வடமராட்சி, செப். 06

வடமராட்சி கிழக்கு கடலில் கடற்படையினரின் விசேட சோதனை நடவடிக்கையியில் 227 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 6 கோடியே 80 இலட்சம் ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 1.30 மணியளவில் ஆழியவளை - வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் வைத்தே இந்தப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையின்போது, சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றை கடற்படையினர் நெருங்க முற்பட்டனர். ஆனால், அதில் வந்தவர்கள் தப்பிச் சென்றிருந்தனர். இந்த நிலையில் படகில் 5 பைகளில் காணப்பட்ட 227 கிலோ 400 கிராம் கேரளா கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றினர். (ஐ-02)

# 180,062 பேருக்கு ஒரேநாளில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன!

கொழும்பு, செப். 06

நாட்டில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத் தின் கீழ் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 62 பேருக்கு நேற்று முன்தினம் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட் டுள்ளன.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்றைய தினம் 25,147 பேருக்கு சினோபாம் தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றனர். ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 38 பேர் இரண்டாவது டோஸ் பெற்றனர்.

இதனிடையே, 2 ஆயிரத்து 774 பேர் அஸ்ட்ராசெனகா தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றனர். 651 பேர் இரண்டாவது டோஸ் பெற்றனர்.

இதேவேளை, மொடர்னா தடுப்பூசி 171 பேர் முதல் டோஸையும், 6,628 பேர் இரண்டாவது டோஸையும் பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# "நெடுந்தீவிலும் கொரோனா மரணம் தனித்தீவை பாதுகாக்க முடியாதா?"

நெடுந்தீவு, செப். 06

"நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு, பிரதான நிலப்பரப்பில் இருந்து வெகு தொலைவில் உள்ள ஒரு சிறிய தீவான நெடுந்தீவை, தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பது என்பது நூறு வீதம் சாத்தியமானது. ஆனால், நெடுந்தீவில் கோவிட் 19 தொற்றினால் ஒருவர் மரணமடைந்திருக்கிறார். இது எப்படி நடந்தது என்பது கவனமாக ஆராயப்பட வேண்டியது. இல்லையேல், எமது தீவு பெருமளவு இழப்புக்களை எதிர்கொள்ள நேரலாம்."

இவ்வாறு, நெடுந்தீவின் பிரதேச சபை உறுப்பினரான க. கேதீஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நெடுந்தீவில் தொற்றுக்குள்ளாகி, யாழ். பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்ற அ. இராசயோகன் என்பவர் கடந்த வியாழக்கிழமை மரணமுற்றார். இவர், இரண்டு மாதங்களுக்கு மேலாக நெடுந்தீவைவிட்டு வெளியூருக்கு சென்றிராத காரணத்தால், தீவுக்குள்ளேயே இவருக்கு தொற்று ஏற்பட்டிருக்கிறது என்பது உறுதியாகிறது.

"ஒரு மாதத்திற்கு முன்பு தொற்றாளர் ஒருவர் ஊருக்குள் அடையாளம் காணப்பட்டபோது, தொற்று மேலும் பரவாதிருக்க என்ன முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டன? என்ற கேள்வி பெரிதாக எழுகிறது. சில தினங்களுக்கு முன்னர்வரை, 90 பேர் வரையில் பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்றுக்குள்ளானவர்கள் என அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள். மேலும் பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டால் மேலும் பல தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம்.

"சுமார் இரண்டாயிரத்து 500 பேர் வரையில் வசிக்கும் ஒரு தனித் தீவில் 90 தொற்றாளர்கள் என்பது விபரீதமானதே. தொற்றில் இருந்து இத் தீவை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அது சம்பந்தமான அதிகாரத்தில் உள்ளவர்கள் உடனடியாகத் மேற்கொண்டு, மேலும் இழப்புகள் ஏற்படாதவாறு பாதுகாக்கவேண்டும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு ப. நோ. கூட்டுறவு சங்கத்தின் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பதற்கான ஏற்பாடுகளை செய்து, கடல் போக்குவரத்தையும் இரண்டு வாரங்களுக்கு அவசர தேவைக்காக கட்டுப்படுத்துவதோடு, தீவகத்தினுள்ளும் மக்களின் அனாவசிய நடமாட்டத்தை காவல்துறையின் உதவியுடன் கட்டுப்படுத்தி, இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில் மக்களின் ஒத்துழைப்பும் சீராக இருக்குமானால், இப் பெரும் தொற்றில் இருந்து நெடுந்தீவை முற்றாக பாதுகாக்க முடியும்." - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

கொரோனா தொற்றால் இறந்தோரின்

# சடலங்களை எரிப்பதில் நெருக்கடி; யாழ். போதனாவில் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 06




கொரோனா தொற்றால் மரணிப்பவர்களின் உடலங்களை தகனம் செய்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் யாழ். போதானா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் யாழ். மாநகர முதல்வர், போதானா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் பொலிஸ் அதிகாரி, மாநகர பொறியிலாளர் எனப் பலர் பங்கேற்றனர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் 52 உடல்கள் தகனம் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இதேசமயம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில 20 சடலங்களே குளிரூட்டியில் பாதுகாக்க முடியும். இனிவரும் நாட்களிலும் தகனம் செய்வதில் நெருக்கடி ஏற்பட்டால் உடல்களை குளிரூட்டிக்கு வெளியிலும் வைக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று மருத்துவர் சத்தியமூர்த்தி இதன்போது தெரிவித்தார்.

தற்போது 18 உடலங்கள் தகனம் செய்வதற்காக போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. நெருக்கடியை போக்க அநுராதபுரம் - கிங்குராங்கொடையில் சடலங்களை எரிக்க முயற்சி எடுத்தபோதும் உறவினர்கள் அதனை விரும்பவில்லை.

எனினும், யாழ்ப்பாணத்திலிருந்து 2 சடலங்களும், கிளிநொச்சியிலிருந்து 5 சடலங்களுமாக 9 சடலங்கள் கிங்குராங்கொடையில் தகனம் செய்யப்படவுள்ளன. இதே வேளை யாழ். மாநகர சபை ஒரு நாளில் 5 சடலங்களை எரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கோரிக்கை விடுத்தார்.

இதன்போது பதிலளித்த யாழ். மாநகர மேயர் மணிவண்ணன், தகனம் செய்யும் மையத்தை தொடர்ந்து இயங்க வைக்க தயாராக உள்ளோம். ஆனால், தகனம் செய்யும் இயந்திரம் அதற்கு இடம் கொடுக்குமா என்பதுதான் பிரச்னை. எனவே, மேலதிகமாக தகனம் செய்யும் இயந்திரம் ஒன்றை நிறுவ முடிவெடுத்துள்ளோம். இது தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் தொழிநுட்ப அறிக்கைகள் திங்கட்கிழமை (இன்று) கிடைக்கப்பெறும். அதன் பிற்பாடு அதனை வேகமாக செய்து முடிக்காலம் என்று தான் எண்ணுவதாக தெரிவித்தார்.

தற்போது தகனத்திற்கு கொண்டு வரப்படுகின்ற உடலங்கள் குளிரூட்டிக்குள் இருந்து எடுத்து கொண்டு வரப்படுவதனால் அதனை தகனம் செய்வதற்கு நீண்ட நேரம் செல்வதாகவும் சாதாரணமாக 30கிலோ எரிவாயுவும் தேவைப்படும் இடத்தில் இவ்வாறான நிலையில் உள்ள உடலங்களை எரிப்பதற்கு 45 கிலோ வரையில் தேவைப்படுவதாக தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் மரணிக்கின்றவர்களின் உடலங்களைத் தகனம் செய்கையில் உரிய சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றியே தகனம் செய்யப்படுவதாகவும் எதிர்காலத்திலும் அவ்வாறான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே உடலங்கள் தகனம் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். இந்த நிலையில், கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை எரியூட்டுவது தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும்கூடி ஆராய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-3)

# இந்திய மீனவர்கள் அத்துமீறல் போராட்டங்களை நடத்த முடிவு!

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம், செப்.06

**இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் தொழில் முறைகளால் ஏற்படுகின்ற பாதிப்புக்களில் இருந்து தங்களை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. பொறுமையின் எல்லையில் இருக்கும் நாம் விரைவில் தொடர் போராட்டங்களில் குதித்து யாழ். இந்திய துணைத் தூதரகத்தை முடக்குவோம் என்று வடக்கு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

அத்துடன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது இருந்த நம்பிக்கையையும் நாம் இழந்து விட்டோம். எமது கடல் வளத்தையும், வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் யாழ். கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அன்னராசா, உபதலைவர் வர்ணகுலசிங்கம் ஆகியோர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் - அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயல்பாடுகளால் எமது தொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றன. அண்மைய நாட்களில் மாத்திரம் எமது கடற்றொழிலாளர்களின் பல மில்லியன் ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டன.

எமது கடலுக்குள் அத்துமீறி வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்களின் செயல்பாடுகள் எமது கடற்றொழிலாளர்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. இதனால், கடலுக்கு செல்வதற்கே நம்மவர்கள் அஞ்சுகின்றனர். எங்கள் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரச்னை பல ஆண்டுகளாக தொடர்கின்ற போதிலும் யாராலும் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், தற்போதைய கடற்றொழில் அமைச்சர் எமது பிரதேசத்தை சேர்ந்தவர், எமது பிரச்னைகளை அறிந்தவர் என்ற அடிப்படையில் காத்திரமாக அணுகுவார் என்று நம்பினோம். அவரும் எமக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால், இது வரை காத்திரமான மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. கடற்றொழில் அமைச்சரால் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் கட்டுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையையும் நாம் இழந்து வருகின்றோம்.

அத்துடன், எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது மாத்திரமன்றி எமது கடல் வளத்தையும் அழிக்கிறார்கள். இதனால் எமது சந்ததியே அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளோம். இதனை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, எமது மக்களை அணி திரட்டி போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இதனடிப்படையில், கட்டம் கட்டமாக மக்கள் போராட்டங்களை விஸ்தரிக்க தீர்மானித்துள்ளளோம். முதற்கட்டமாக சமூக இடைவெளிகளை மதித்து, மனித சங்கிலிப் போராட்டம் நடத்த தீர்மானித்திருப்பதுடன், அடுத்த கட்டமாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முடக்குதல் மற்றும் கடலில் இறங்கி கறுப்புக் கொடிப் போராட்டதை நடத்துவது தொடர்பாகவும் தீவிரமாக சிந்தித்து வருகின்றோம்.

கொரோனா காலத்தில் போராட்டங்களில் ஈடுபடுவது பொருத்தமற்றது என்ற போதிலும் எமக்கு ஏற்படுத்தப்படுகின்ற வாழ்வாதார அச்சுறுத்ல் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி போராட்டங்களை நடத்த வேணடிய நிர்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம்- என்றனர். (ஐ)



# வவுனியாவில் மக்கள் நடமாட்டம் ஊரடங்குவேளையில் அதிகரிப்பு!

வவுனியா, செப். 06

வவுனியா மாவட்டத்தில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது ஊரடங்கு சட்டத்தையும் மீறி மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகின்றது.

கோவிட் தொற்று பரவல் காரணமாக நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ளது. குறித்த காலப் பகுதியில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கோவிட் தொற்று மற்றும் கோவிட் இறப்பு என்பன சடுதியாக அதிகரித்துள்ள போதும், அதனைப் பொருட்படுத்தாமல் வர்த்தக நிலையங்கள் சில திறந்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது செயல்படுவதுடன் நடமாடும் வர்த்தகர்களும் ஒரே இடத்தில் வாகனங்களை நிறுத்தி மக்களை ஒன்றுகூட்டி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

மேலும், வீதியில் செல்பவர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபடுபவர்கள் என சிலர் முகக்கவசமின்றியும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதும் நடமாடுகின்றனர். வங்கிகள், மருந்தகங்கள், மரக்கறி விற்பனையகங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் ஒரு கதவுடன் திறந்திருக்கும் வர்த்தக நிலையங்கள் என்பவற்றை நோக்கி மக்கள் அதிகளவில் வந்து செல்வதுடன் வங்கிகளிலும் மருந்தகங்களிலும் அதிக சன நெரிசலையும் அவதானிக்க முடிந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்ந நிலை தொடருமானால் வவுனியாவின் கோவிட் பரவலை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என சுகாதாரப் பிரிவினர் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ)

# அதிகார பேராசையில் ஜனாதிபதி; அவசரகால சட்டத்தை எதிர்ப்போம்!

## ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார

கொழும்பு, செப். 06

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகார பேராசையில் செயல்படுகிறார். எனவே இன்று பாராளுமன்றில் நடக்கவுள்ள அவசரகால சட்டம் மீதான வாக்கெடுப்பில் நாம் எதிர்த்து வாக்களிப்போம்”,

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ளார்.

கட்சி தலைமையகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு, “நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறிக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துறை சார் அதிகாரங்களையும் மிகவும் சூட்சமமான முறையில் செயல்படுத்துகிறார்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டுமாயின் அவர் நுகர்வோர் பாதுகாப்பு உரிமை சட்டத்தையும், பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 17 ஆவது அத்தியாயத்தையும் அமுல்படுத்தியிருக்கலாம். ஆனால், அதனை விடுத்து பொதுமக்கள் பாது காப்பு சட்டத்தின் 5 ஆம் அத்தியாயத்தை ஜனாதிபதி தெரிவு செய்துள்ளமை அவரது அதிகார பேராசையை வெளிப் படுத்தியுள்ளது. ஆகவே, இன்று பாராளுமன்றில் சமர்பிக்கப் படும் அவசரகால சட்டத்திற்கு எதிராக வாக்களிப்போம். அரசியல்வாதிகள் அரச வரப்பிரசா தங்களுக்கு துணை போகாமல் மனச்சாட்சியுடன் செயல்பட வேண்டும் - என்றார் (ஐ)

# உடையும் நிலையில் தண்ணீர் தாங்கி அகற்றி தருமாறு மக்கள் கோரிக்கை!

மன்னார், செப். 06

மன்னார் உப்புக்குளம் கடற்கரை வீதியில் கடந்த 20 வருடங்களுக்கு மேல் பாவனை இன்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் சுமார் 70 அடி உயரமான தண்ணீர் தாங்கி சரிந்து விழும் நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதனால் அதன் சுற்றுச் சூழலில் வசித்து வரும் மக்கள் தினமும் அச்சத்துடன் அந்தப் பகுதியால் பயணிக்கின்றனர் என்று மக்கள் நல்லாட்சி மன்றத்தின் பொதுச் செயலாளர் எம். யூனூஸ் கனூன் தெரிவித்தார்.

தற்போது அபாய நிலையில் காணப்படும் தண்ணீர் தாங்கிக்கு முன்பு காணப்படும் பாதையை அப்பகுதி மக்களும் ஏனைய மக்களும் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்வரும் காலங்களில் அனர்த்தம் ஏற்பட்டு உயிர்ச்சேதங்கள் ஏற்படு வதற்கு முன் விரைந்து செயல்பட்டு தண்ணீர் தாங்கியை உடன் அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ)

# ஊரடங்குவேளையில் கல்வியங்காட்டில் கடை உடைத்து களவு

யாழ்ப்பாணம், செப். 06

ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த நேரத்தில் கல்வியங்காடு சந்தியில் பிரபல வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டன.

இந்தச் சம்பவம் கல்வியங்காடு சந்தைக்கு அண்மையாக நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு, அங்கிருந்து பால் மா பொருட்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள் என பல ஆயிரம் ரூபாய் மதிப்பான பொருட்கள், சிறு தொகை பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

அத்துடன், அங்கிருந்த சி.சி.ரீ.வி. கமெராவின் சேமிப்பகத்தையும் திருடர்கள் களவாடி சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தத் திருட்டு சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# வேடுவர் தலைவரின் மனைவி கொரோனாவால் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 06

வேடுவர் சமூகத்தின் தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோவின் மனைவி கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

கொரோனா தொற்றுக்குள்ளாகி கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டிருந்த ஊருவரிகே ஹீன் மெனிக்கவே பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் மரணமானார்.

தொற்றுக்குள்ளாகி கடந்த இரண்டு வாரங்களாக அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு கிசிச்சை பெற்று வந்தார். 9 பிள்ளைகளின் தாயாரான இவர் சிறிது காலமாக சிறுநீரக பிரச்னையால் அவதிப்பட்டு வந்தாரெனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை வேடுவ சமூகத்தின் தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோவின் குடும்பத்தின் மேலும் சிலரும் கோவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேடுவ சமூகத்தின் தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோ உள்ளிட்ட வேடுவ சமூகத்தினர் அண்மையில் கோவிட் 19 தடுப்பூசி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தேர் ஏறி வந்தான் நல்லை கந்தன்
















# அரசாங்கம் மனித உரிமைகள் பிரச்னைக்கு தீர்வுகாணவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, செப். 06

“மனித உரிமைகளுக்கு முக்கியத்துவமளித்து ஒன்றிணைந்து இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும். அத்துடன், உள்ளக பொறிமுறைகளைப் பயன்படுத்தி மனித உரிமைகள் தொடர்பான பிரச்னைகளுக்கு அரசாங்கம் தீர்வு காணவேண் டும்”, என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று எதிர்க்கட்சி அலுவலகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்த வாரம் நியூசிலாந்தில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து அந்நாட்டு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் ஊடாக நாம் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# தெரணியகலை தவிசாளரின் மூக்கை வெட்டினார் பெண்!

கொழும்பு, செப். 06

கேகாலை - தெரணியகலை பிரதேச சபையின் தவிசா ளர் லக்ஷ்மன் ராஜகருணவின் மூக்கை பெண்ணொ ருவர் துண்டாடியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்த தவிசாளர் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

பிரதேச சபையின் தவிசாளர் தனது வாகனத்தில் தெரணியகல நகரை நோக்கி பயணித்துக் கொண்டி ருந்த போது, குறித்த பெண் வாகனத்தை வழிமறித் துள்ளார்.

இதன் பின்னர் இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், சந்தேகநபரான பெண், முகச்சவரத்திற்கு பயன்படுத்தும் பிளேட்டினால் தவிசாளரின் மூக்கை அறுத்துள்ளார்.

எனினும், தவிசாளரும் அந்தப் பெண்ணின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். இதில், காயமடைந்த பெண்ணும் மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)



# 20-30 வயது பிரிவினருக்கு இன்று முதல் தடுப்பூசி!

## இராணுவ தளபதி அறிவிப்பு

கொழும்பு, செப். 06

மேல் மாகாணத்திலும், காலி மாவட்டத்திலும் 20 முதல் 30 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்று திங்கட் கிழமை முதல் ஆரம்பமாகிறது என்று கோவிட்-19 தடுப்பு செயலணியின் பிரதானி இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அந்த மாவட்டங்களில் தற்போது தடுப்பூசி செலுத்தப்படும் மையங்களிலும் அவர்களுக்கான தடுப்பூசிகள் ஏற்றப்படும்.

அதேநேரம் கொழும்பு மாவட்டத்தில் அதற்கு மேலதிகமாக, விஹாரமாதேவி பூங்கா, தியத்த உயன, பனாகொடை இராணுவ முகாம் மற்றும் வேரஹெர இராணுவ வைத்தியசாலையிலும் இன்று முதல் தடுப்பூசி செலுத்தப்படும் - என்றும் அவர் கூறினார்.

# 1,026 கிலோ மஞ்சளுடன் புத்தளத்தில் நால்வர் கைது!

புத்தளம், செப். 06

சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1026 கிலோ உலர்ந்த மஞ்சளை தாம் கைப்பற்றினர் என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் நால்வரை கைது செய்த னர் என வும் கடற்படையினர் தெரிவித்தனர்.

புத்தளம் - கற்பிட்டி - ஏத்தாளை பகுதியிலேயே நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டது.

இந்தப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்ட கடற்படையினர் சந்தேகத்துக்கு இடமான முறையில் இரு படகுகளை சோதனையிட்டனர். அப்போது, 31 உர மூடைகளில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்த 1026 கிலோ மஞ்சளை அவர்கள் கைப்பற்றினர்.

இதன்போது படகில் இருந்த நால்வரை கைது செய்தனர். அத்துடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட இரு



டிங்கி படகுகளையும் அவர்கள் கைப்பற்றினர்.

இதேவேளை, கற்பிட்டி பிரதேசத்தில் கடந்த ஐந்து நட்களில் மட்டும் 3004 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப் பற்றப்பட்டுள்ளதுடன், எட்டு பேர் சந்தேகத்தில் கைது செய் யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 133 பூட்டப்பிள்ளைகள் கண்ட மூதாட்டி தொற்றுக்கு மரணம்!

வடமராட்சி, செப். 06

வல்வெட்டித்துறையில் 99 வயதான தேசோமயானந்தம் புஸ்பகாந்தியம்மா என்பவர் கொரோனா தொற்றால் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப் பட்டது.

1922ஆம் ஆண்டு பிறந்த அவருக்கு 12 பிள்ளைகள், 64 பேரப் பிள்ளைகள், 133 பூட்டப்பிள்ளைகள், 42 கொள்ளுப் பேரப் பிள்ளைகள் உள்ளனர் என்று அவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

தொற்றால் உயிரிழந்த மூதாட்டி மரணமடைவதற்கு முதல்நாள்கூட சுறுசுறுப்பாக இயங்கியிருந்தார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-2)

# கிழக்கின் மீன்பிடி துறை எதிர்கொள்ளும் சவால்கள்

மட்டுநகரான்

வடக்கு, கிழக்கு பகுதியானது நீண்ட இயற்கை வளங்களைக் கொண்ட பகுதியாக உள்ளது. 30 வருடகால யுத்தம் மற்றும் போராட்டங்கள் இந்த வளங்களை பாதுகாப்பதற்காகவே முன்னெடுக்கப்பட்டது. வட, கிழக்கில் காணப்படும் வளங்களை தமிழர்கள் அனுபவிக்கக்கூடாது அதனையும் தங்கள் இனமே அனுபவிக்க வேண்டும் என்று சிங்கள பேரினவாத சக்திகள் தொடர்ச்சியாக பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் தமிழர்கள் மத்தியில் காணப்படும் வளங்களை தமிழர்கள் முறையாக பயன்படுத்துவதுமில்லை, புலம்பெயர் தமிழர்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வது மில்லை. இதன் காரணமாக தமிழர்கள் மத்தியில் காணப்படும் வருமானமீட்டும் வளங்களை மாற்று இனங்கள் பயன்படுத்தி வருமானமீட்டுவதுடன் அப்பகுதிகளை அபகரிக்கும் நிலையும் காணப்படுகின்றன.

நாங்கள் வெறுமனே தமிழ் தேசிய கொள்கையை வாய் வார்த்தைகளாக கூறிக் கொண்டும் தமிழர்களுக்கு நடந்த அநீதிகளுக்கு நீதிகளைக் கோரிக் கொண்டு எமது பகுதிகளில் முறையான எந்தவித விதமான வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்காமல் இருப்பதன் காரணமாக மிகவும் சூட்சுமமான முறையில் வளங்கள் அபகரிக்கும் நிலையினை காணமுடியும்.

குறிப்பாக இந்த கட்டுரையில் நீர்வளங்களை தமிழர்கள் சரியான முறையில் பயன்படுத்தாத காரணத்தினால் அந்த வளங்களை சிங்களவர்களும் முஸ்லிம்களும் பயன்படுத்தி தமது பொருளாதார நிலைமையினை மேம்படுத்துகின்றதை சொல்வதுடன் இதனை தடுத்துநிறுத்தி எமது பகுதியில் காணப்படும் வளங்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றோம் என்பதை சிந்திக்க வைப்பதாக பல விடயங்களை எழுதலாம் என்று நினைக்கின்றேன்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தினை மட்டும் இந்த கட்டுரையின் ஊடாக எழுத நினைக்கின்றேன். மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் நன்னீர் மீன்பிடி, கடல் மீன்பிடி என இரண்டு பின்பிடி நிலைமைகள் காணப்படுகின்றன. அவற்றினை நாங்கள் இங்கு தனித்தனி பகுதியாக எழுதுவதன் மூலமாக இந்த மாவட்டத்தின் மீனவர்களின் நிலைமையை வெளிக் கொணரமுடியும் என நினைக்கின்றேன்.

**நன்னீர் மீன்பிடி**

மட்டக்களப்பு மாவட்டம் விசாலமான நீர்ப்பாசனக் குளங்கள் பலவற்றைக் கொண்டிருக்கிறது. இவற்றின் மொத்த நீரேந்து பரப்பு 576 சதுர மைல்களாகும். அங்கெல்லாம் நன்னீர் மீன்கள் பெருக்கம் அடைந்துள்ளன.

வருடமொன்றுக்கு பாரிய நீர்ப்பாசனக் குளங்களிலிருந்து மாத்திரம் ஏறக்குறைய 850 மெற்றிக் தொன் மீன்கள் அறுவடை செய்யப்படுவதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. பாரிய குளங்களைத் தவிர மத்திய தரக் குளங்களும், சிறு குளங்களும் இம்மாவட்டத்தில் இருக்கின்றன. அங்கும் நன்னீர் மீன் உற்பத்தி இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சை, கட்டுமுறிவு, உறுகாமம், நவகிரி ஆறு, வாகனேரி என பல வற்றாத குளங்கள் காணப்படுகின்றன. அக்குளங்களிலிருந்து தமது ஜீவனோபாயத் தொழிலாக நன்னீர் மீன்பிடியை மீனவர்கள் கைக்கொண்டு வருகிறார்கள். பாரிய குளங்களில் மாத்திரம் சுமார் 700 பேர் இவ்வாறு மீன்பிடித் தொழிலை கைக்கொண்டு வருகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீன் உற்பத்தி பதுளை மாவட்டத்திற்கும் அதன் அருகிலுள்ள மாவட்டங்களுக்கும், நாள் தோறும் அனுப்பப் படுகின்றது. மட்டக் களப்பு மாவட்டத்தில் மீன் உற்பத்தியில் 1998ம் ஆண்டுகளிலிருந்து புதியவகை மீனினங்களும், புதிய வகையான நீர் உயிரினங்களின் வளர்ப்பு முறைகளும் புகுத்தப்பட்டுள்ளன. தடாக மீன் வளர்ப்பு, பாரிய குளங்களில் நன்னீர் இறால் வளர்ப்பு, மற்றும் நண்டு வளர்ப்பு, இறால் பண்ணைகள் என அவை விரிந்து செல்கின்றன.

இப்போது பாரிய குளங்களிலிருந்து பாரிய எண்ணிக்கையில் அறுவடை செய்யப்படுகின்ற மீன் திலாப்பியா இனத்தைச் சேர்ந்த நைலோட்டிக்காவாகும். அது மொத்த அறுவடையில் 95-97 வீதத்தைக் கொண்டிருக்கிறது. அதே போன்று ரோகு மீன் (செங்கணையான்) பிடிபடுகிறது. ரோகு மீன் எப்போதும் அதிக நிறை கொண்டதாகவும். முதிர்ச்சி அடைந்ததாகவும் காணப்படுகிறது.

ரோகு மீன் 2000ஆம் ஆண்டளவில் தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதையொட்டி மீனவர்களுக்கு மீன்வளர்ப்பு முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வாறான மீன்களில் திலாப்பியா இனம் தாமாக இனம் பெருக்கக் கூடியது. ஆனால் ரோகு மீன் அவ்வாறில்லை. இதற்கு இனம்பெருக்கும் உணர்வு புதிய நீரோடைகள் குளத்தில் விழுந்து கலக்கும்போது ஏற்படும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

ரோகு மீன்ரோகு மீன் (செங்கணையான்) மிக விரைவாக வளர்ச்சி அடையக் கூடியது, அதிக எடையில் வளரும். மீனவர்களுக்கும், நுகர்வாளர்களுக்கும் நன்கு பழக்கப்பட்டது. அதற்கான சந்தை வாய்ப்பு நமது நாட்டின் பல பாகங்களிலும் நல்ல நிலையில் உள்ளது, நாம் அதனை பாரிய எண்ணிக்கையில் அனைத்து பாரிய குளங்களிலும் வளர்க்க வேண்டும். அதற்கான வசதி வாய்ப்புகள் தமிழ் மீனவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ள பாரியளவிலான மீன்பிடி குளங்களில் பெரும்பான்மை யினத்தவர்களும் வந்து தங்கியிருந்து மீன்பிடித்துச் செல்லும் நிலையினால் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பான்மை யினத்தவர்கள் சகல வசதிகளும் கொண்டவர்களாக மீன் சேகரித்து வைக்கும் வாகனங்களில் வந்து மீன்களை பிடித்துச் செல்வதனால் அன்றாடம் மீன்பிடித்து வியாபாரம் செய்யும் தமிழ் மீனவர்களினால் ஈடுகொடுக்காத நிலையே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் 145 கிலோமீற்றர் நீளத்தினைக் கொண்டதாக கடல் வளம் உள்ளது. வாகரை தொடக்கம் பெரிய கல்லாறு வரையான பகுதிகளில் பெருமளவான பகுதியான தமிழர் பகுதிகளை சார்ந்தேயுள்ளது.

கடல் மீன்பிடிகுறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 26,000 மீனவர் குடும்பங்கள் உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் சுமார் 75வீதமான கடல் பகுதியானது தமிழர்கள் வாழும் பகுதியிலேயே உள்ள போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் பகுதிகளில் சுமார் 10,000மீனவர் குடும்பங்களே உள்ளன. ஏனையவர் களில் பெரும்பாலானவை முஸ்லிம் மற்றும் சிங்களவர்களாகவே காணப்படுகின்றன.

யுத்த காலத்தில் தமிழர்களின் மீன்பிடி வளங்கள் அழிக்கப்பட்டதுடன் அவர்கள் இடம்பெயரச் செய்யப்பட்ட காரணத்தினாலும் பலர் நாட்டை விட்டுச் சென்றதன் காரணமாகவும் தமிழர்களில் பலர் இந்த மீன்பிடியை கைவிட்டு வேறு தொழில் தேடிச் சென்ற காரணத்தினாலும் கடல் தொழிலில் தமிழர்களின் நிலை கேள்விக் குறியாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடும் 150க்கும் மேற்பட்ட படகுகள் இருக்கின்றன. இதில் ஒரு படகு கூட தமிழர்களுக்கு இல்லை. யுத்தம் முடிந்த காலப் பகுதியில் 20க்கும் மேற்பட்ட படகுகள் அரச சார்பற்ற அமைப்புகள் ஊடாக தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் அந்த படகுகளை அன்று இருந்த மாகாண சபை ஆட்சியாளர்கள் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் விற்பனை செய்து விட்டனர். இன்று இயந்திரப் படகுகள் கொண்டே தமிழர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் குறைந்தது இரண்டு தினங்கள் மீன்பிடியில் ஈடுபட முடியும்.

ஆனால், அதிகளவான மீனை பிடித்துக் கொண்டுவர முடியாது. இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் முற்றுமுழுதாக சிங்கள மீனவர்களினதும் முஸ்லிம் மீனவர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. இந்த நிலையானது எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழர்களுக்கு உகந்த நிலையில்லை. ஏற்கனவே பல்வேறு வழிகளிலும் மட்டக்களப்பு மாவட்டம் சுரண்டப்பட்டு வரும் நிலையில் கடல் பகுதியில் இந்த நிலை நீடிக்குமானால் எதிர் காலத்தில் மட்டக்களப்பின் கரையோரப் பகுதிகள் பாரியளவில் குடியேற்றங்கள் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் அதிகளவில் உள்ளன.

இன்று முஸ்லிம்களில் தொழிலதிபர்களில் பலர் தங்களது வியாபாரங்களில் வரும் இலாபங் களில் ஒரு பகுதியை கடல் தொழிலில் முதலீடு செய்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய நிலையில் வாழைச்சேனை மீன்பிடி துறை முகம் மட்டுமே உள்ளது. இங்கிருந்தே பாரிய படகுகள் கட லுக்கு மீன்பிடிக்க செல்கின்றன. இங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 90வீதமான படகுகள் முஸ்லிம்களுக்கு சொந்தமானது. அதன் காரணமாக குறித்த துறைமுக பகுதி முஸ்லிம் குடியேற்ற பகுதியாக மாற்றியிருக்கின்றது.

இதேபோன்று மட்டக்களப்பு முகத்துவாரம், பெரிய கல்லாறு முகத்துவாரம் பகுதிகள் இயற்கை துறைமுகப் பகுதியாக காணப்படுகின்றது.

இப்பகுதியில் தமிழர்கள் முதலீடுகளை செய்து பாரியளவிலான படகுகளைக் கொண்டு மீன்பிடிகளை மேற்கொள்வதன் மூலம் பாரியளவிலான வருமான மீட்டக் கூடிய நிலையுள்ளது. இவ்வாறான வழிகள் குறித்து புலம்பெயர் தொழில் முனைவோரும் தமிழ் தொழிலதிபர்களும் சிந்திக்க வேண்டியதருமாகும். மீன்பிடி நடவடிக்கைகள் முற்று முழுதாக மாற்று இனத்திற்கு செல்லுமானால் தமிழர்களின் இருப்பும் இல்லாமல் செல்லக் கூடிய நிலையுள்ளது. எனவே இது தொடர்பில் உரியவர்கள் சிந்திக்க வேண்டிய தருணமாக இதனை நாங்கள் பார்க்கின்றோம் ■



# ஆப்கானிஸ்தானில் தலிபான் எழுச்சி பாகிஸ்தானை எவ்வாறு பாதிக்கும்?

**ஜேம்ஸ் லேண்டலே**



புதிய தலிபான் அரசைக் கட்டுப்படுத்த நினைக்கும் சில மேலை நாட்டு சக்திகளுக்கு, பாகிஸ்தான் மத்தியஸ்தராக விளங்கும் என்று நம்பப்படுகிறது. ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள உறவு தனித்துவமானது. இரு நாடுகளுக்கு இடையே இருக்கும் எல்லை 2570 கிலோமீற்றர் நீளம் கொண்டது. இரு நாடுகளுக்கும் வணிகத் தொடர்பு உண்டு. பல மரபுசார்ந்த, இனக்குழு சார்ந்த, மதரீதியான தொடர்புகளும் உண்டு.

ஆப்கானிஸ்தானின் முன்னாள் அதிபர் ஹமீத் கர்சாய், “இரு நாடுகளும் பிரிக்க முடியாத சகோதரர்களைப் போன்றவை” என்று குறிப்பிட்டார். சில நாடுகள் இஸ்லாமாபாத்துடன் இருக்கும் உறவைப் புதுப்பிக்க விரும்புகின்றன. அங்கு கலவையான உணர்வுகளே தோன்றுகின்றன.

ஜிஹாதி தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் ஒரு வலுவான நட்பு நாடு என்று சொல்லிவிடமுடியாது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள், பாகிஸ்தான் தாலிபனை ஆதரிக்கிறது என்று நெடுங்காலமாகவே குற்றம் சாட்டி வருகின்றன. ஆனால் பாகிஸ்தான் இதை மறுக்கிறது.

ஆனால், மேலை நாடுகளைச் சேர்ந்த பல தூதர்கள், தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றவும், உதவிகள் வழங்கவும், மிதமான ஓர் ஆட்சி வழங்கவும் தலிபானுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார்கள். இதுபோன்ற ஒரு பேச்சுவார்த்தைக்கு முன்னதாக அங்கிருக்கும் பாகிஸ்தான் உள்ளிட்ட பிற நாடுகளுடன் பேசவேண்டியிருக்கும்.

**தலிபான்களுடனான பாகிஸ்தானின் உறவு**

ஆப்கானிஸ்தான் மற்றும் தலிபானுடன் பாகிஸ்தான் ஒரு மழுப்பலான உறவில் இருப்பதாக விமர்சகர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆப்கானிஸ்தானில் திட்டமிட்டு அமெரிக்கா மீது நடத்தப்பட்ட 9/11 தாக்குதல்களுக்குப் பிறகு, “தீவிரவாதத்துக்கு எதிரான போரில்” அமெரிக்காவின் நட்பு நாடாக பாகிஸ்தான் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது.

ஆனால், இது நடந்துகொண்டிருக்கும்போதே, பாகிஸ்தானின் ராணுவம் மற்றும் உளவுத் துறையினர் பலரும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த தலிபான் உள்ளிட்ட இஸ்லாமியவாத அமைப்புகளோடு தொடர்பில் இருந்நதனர். சில நேரங்களில் இந்தத் தொடர்பு பொருட்கள் மற்றும் நிதியுதவியை அளிக்கும் அளவுக்குத் தீவிரமானதாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்தியாவுக்கு ஆதரவான அரசாங்கம் ஆப்கானிஸ்தானில் அமைந்துவிடக்கூடாது என்பதற்காகவே அங்குள்ள தொடர்பை பாகிஸ்தான் விடவில்லை என்று சொல்லப்படுகிறது. பாகிஸ்தான் எந்த அளவுக்கு எத்தனை காலமாக தலிபானுக்கு ஆதரவு தந்திருக்கிறது என்பதில் பல சர்ச்சைகள் நிலவுகின்றன.

ஆனால், 20 ஆண்டுகளுக்கு முன்னர் தலிபான்கள் அதிகாரத்தில் இருந்தபோது, அந்த அரசை அதிகாரபூர்வமாக அங்கீகரித்த மிகச் சில நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று.சென்ற மாதம் காபூல் நகரைத் தலிபான்கள் கைப்பற்றியபோது, அவர்கள் “அடிமைத்தளையை உடைக்கிறார்கள்” என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார்.

**பாகிஸ்தான் கவலை**

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் தலிபானுக்குப் பாகிஸ்தான் ஆதரவு தந்திருக்கிறது என்றாலும், காபூல் நகரை அவர்கள் கைப்பற்றியதைப் பாகிஸ்தான் இயல்பாக எடுத்துக்கொள்ளும் என்று சொல்லிவிட முடியாது. ஆப்கானிஸ்தானிலிருந்து வரும் இஸ்லாமியவாத தீவிரவாத அமைப்புகள் கடந்த பல வருடங்களாகவே பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தாக்குதல் நடத்தியிருக்கின்றன. இதில் பாகிஸ்தானின் குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இப்போது காபூலில் அமைந்திருக்கும் புதிய அரசு, அல்ஹைய்தா மற்றும் உள்ளூர் அமைப்பான ஐ.எஸ்-கே ஆகியவற்றைத் தகர்க்கவேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது. தாலிபன்கள் கடுமையாக நடந்துகொள்ளவேண்டும் என்றும், கட்டுப்பாடு இல்லாமல் ஆப்கானிஸ்தான் இயங்குவதை அவர்கள் தடுக்கவேண்டும் என்றும் பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது.

பாகிஸ்தானுக்கு அகதிகள் பிரச்னையும் முக்கியமானதாக இருக்கிறது. முந்தை போர்க் காலங்களிலிருந்து ஏற்கனவே 3 மில்லியன் ஆப்கானிஸ்தான் அகதிகள் பாகிஸ்தானுக்கு வந்திருக்கிறார்கள். சிதைந்து போயிருக்கிற தனது பொருளாதாரத்தை வைத்துக்கொண்டு இதற்கு மேல் வரும் அகதிகளைப் பாகிஸ்தானால் கவனித்துக்கொள்ள முடியாது.

பிரிட்டனுக்கான பாகிஸ்தான் உயர் ஆணையர் மொவாஸம் அஹ்மத் கான் பி.பி.சி. ருடே நிகழ்ச்சியில் பேசும்போது, “இப்போது எங்களால் புதிய அகதிகளை சமாளிக்க முடியாது. அதனால்தான் இருதரப்பும் அமர்ந்து பேசி இது நடக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்,” என்றார்.



பாகிஸ்தானுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையே சுமுகமான உறவுநிலைகள் இல்லை. அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள நட்பு மோசமான நிலையில் இருக்கிறது. அமெரிக்காவின் அதிபரான பிறகு பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கானைத் தொலைபேசியில் அழைத்துப் பேசுவதற்குக் கூட ஜோ பைடன் மறுத்துவிட்டார்.

அமெரிக்காவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் ஜெனரல் எச்.ஆர்.மெக்மாஸ்டர் இந்த வாரம், வெளியுறவுக் கொள்கை தொடர்பான ஒரு மாநாட்டில் பேசினார். அப்போது அவர், “ஜிஹாதி அமைப்புகளுடனான தனது தொடர்பை பாகிஸ்தான் துண்டித்துக் கொள்ளாவிட்டால் அது தீண்டத்தகாத நாடாக ஒதுக்கி வைக்கப்படும்” என்றார்.

“பாகிஸ்தான் ஒரு நட்பு நாடு என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். அதை நிறுத்தவேண்டும். இந்த சக்திகளுக்கு உதவுவது, பயிற்சி தருவது, மேலாண்மை செய்வது ஆகியவற்றின் மூலம் பாகிஸ்தான் நமக்கு எதிரான நாடாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களது வெளியுறவுக் கொள்கையின் ஓர் அங்கமாகவே இந்த ஜிஹாதி தீவிரவாத அமைப்புகளைப் பயன்படுத்துகிறது” என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்காவின் இந்த பார்வையை மீறியும் மேலை நாடுகள் பாகிஸ்தானை நாடியிருக்கின்றன. பிரிட்டன் மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இஸ்லாமாபாத்துக்குச் சென்று வந்துள்ளனர். விரைவில் இந்தப் பட்டியலில் இத்தாலியும் சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தலிபான்கள் மீது பாகிஸ்தானுக்கு கொஞ்சம் அதிகாரம் இருக்கிறது என்று ராஜதந்திரிகள் நம்புகிறார்கள் - அல்லது குறைந்தபட்சம் அப்படி ஓர் எதிர்பார்ப்பாவது இருக்கிறது. இதைத்தவிர, பாகிஸ்தானை ஒதுக்கிவைத்தால் அது சீனா பக்கம் சாயும் என்ற அச்சமும் நிலவுகிறது. பாகிஸ்தானால் தலிபானின் நிலைப்பாடுகள்மீது ஆதிக்கம் செலுத்த முடியுமா என்பதுதான் இப்போதைய முக்கியக் கேள்வி.

புதிய அரசின் தலைவராக எதிர்பார்க்கப்படுகிற முல்லா அப்துல் கானி பராதர், பாகிஸ்தானின் சிறையில் காலம் கழித்தவர். அவர் எந்த அளவுக்கு பாகிஸ்தானின் சொற்களைக் கேட்பார் என்பது போகப் போகத்தான் தெரியும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I


நேரம் : 1 மணித்தியாலம்

12. பின்வரும் அடைப்புக்களில் எண்கள் அமைந்துள்ள விதத்திற்கு ஏற்ப -?- குறியிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 5 | 10 | 12 | 7 |
| 12 | 20 | 30 | 36 | 49 |

→ 3, 4, 3, 3, ..-?-..

(1) 5　　(2) 7　　(3) 9


13. 

இந்த உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 10
(2) 11
(3) 12

14. நோயாளி ஒருவருக்கு நான்கு மருந்து மாத்திரைகளை வழங்கிய வைத்தியர், அவற்றை அரை மணித்தியாலத்திற்கு ஒன்று வீதம் உட்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கினார். நோயாளிக்கு, நான்கு மருந்து மாத்திரைகளையும் உட்கொள்வதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) 1 மணித்தியாலம்
(2) 1 மணித்தியாலம் 30 நிமிடம்
(3) 2 மணித்தியாலம்

15. 


இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 1 லீற்றர் பாலைச் சரியாக அளக்க முடியுமா?

(1) முடியும்
(2) முடியாது
(3) விடையளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை


16. நான் ஒரு பெண் ஆவேன். மீனாவின் மகள் எனது மகளின் தாயாவாள் எனின், மீனாவுக்கும் எனக்கும் உள்ள உறவு முறை யாது?

(1) மீனாவுக்கு நான் தாய் ஆவேன்.
(2) மீனாவுக்கு நான் மகள் ஆவேன்.
(3) மீனாவுக்கு நான் பாட்டி ஆவேன்.

17. ஒக்டோபர் 28 தொடக்கம் நவம்பர் 26 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கையை மே 29 தொடக்கம் ஜூன் 12 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கையால் வகுக்கும் போது விடையாகக் கிடைக்கும் எண் யாது?

(1) 2　　(2) 3　　(3) 5


18. அருகே சதுரமுகிகளின் அடுக்குகள் இரண்டு தரப்பட்டுள்ளன.




இந்த இரண்டு அடுக்குகளிலும் காணப்படும் சதுரமுகிகளின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 28
(2) 39
(3) 29


● 19, 20 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

19.  ..............................



(1)　　(2)　　(3)

20.  ..............................



(1)　　(2)　　(3)

21. ◇ ★ = 8 உம்

◇ ◇ ★ = 10 உம் ஆகும் எனின்,

◇ ★ ★ ★ ★ = .................... என்பதில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) 18　　(2) 26　　(3) 30

22. நான் 28 ரூபாயைக் கொடுத்து 1 மாம்பழத்தையும் 2 கொய்யாப்பழங்களையும் வாங்கினேன். மாம்பழம் ஒன்றின் விலை கொய்யாப்பழம் ஒன்றின் விலையைப் பார்க்கிலும் 10 ரூபாய் அதிகமாகும். கொய்யாப்பழம் ஒன்றின் விலை யாது?

(1) 5 ரூபாய்　　(2) 6 ரூபாய்　　(3) 7 ரூபாய்

# கொரோனா மரணங்களை தடுப்பதற்கு 2 தடுப்பூசிகளையும் செலுத்துவதே தீர்வு

## வைரஸ் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் மலிக் பீரிஸ் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 06**

**“கொரோனா காரணமாக மரணித்தவர்களில் இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தியோர் 3 சதவீதமாவர்களே. எனவே, கொரோனா மரணங்களைத் தடுப்பதற்கு இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்திக்கொள்வதே ஒரே வழி.”**



- இவ்வாறு ஹொங்கொங்கில் வசிக்கும் வைரஸ் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் மலிக் பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான கட்டுப்பாட்டு வழிமுறைகள் தொடர்பாக ஆராயும் மெய்நிகர் கலந்துரையாடலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சர்வதேச வணிகர் அமைப்பு ஒன்றின் இலங்கைக் கிளையினரால் ஒழுங்கபடுத்தப்பட்ட இந்த மெய்நிகர் கலந்துரையாடலில் மருத்துவத்துறை விற்பன்னர்களுடன், வர்த்தக முன்னோடிகள், சுற்றுலாத்துறை சார்ந்தோர் மற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

”இலங்கையில் கொரோனா காரணமாக மரணிப்போரில் 83 சதவீதமானவர்கள் 50 - 80 வயதுக்குட்பட்டவர்கள். எனவே, இந்த வயதுப் பிரிவினர் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுவிட்டால் கொவிட் மரணங்களைப் பெருமளவு கட்டுப்படுத்திவிடலாம்.

தற்போது இந்த வயதுப் பிரிவினர் பலரும் தடுப்பூசி செலுத்தாமல் இருந்து வருகின்றனர் என்பதை அண்மைய கொரோனா மரணங்கள் காட்டுகின்றன. இதற்கான காரணத்தை ஆராய்ந்து இந்த வயதுப் பிரிவினருக்குத் தவறாமல் இரண்டு தடுப்பூசிகளையும் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்” - என்றார்.

உங்கள் அபிப்பிராயப்படி எந்தத் தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வது நல்லது என்று அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

”எந்தத் தடுப்பூசி உங்களுக்குக் கிடைக்கிறதோ, அந்தத் தடுப்பூசியே நல்லது” என்று அவர் பதிலளித்தார்.

எல்லாத் தடுப்பூசிகளுமே ஒரே விதமான தொழில்நுட்பத்தையே கையாள்கின்றன என்று சுட்டிக்காட்டிய அவர், எனவே, எந்தத் தடுப்பூசி சிறந்தது என்று ஆய்வுசெய்து காலத்தை வீணடிக்காமல், கிடைக்கின்ற தடுப்பூசியைப் பெற்று உயிராபத்தைத் தவிர்த்துக்கொள்ள அனைவரும் முயலவேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார். (இ)

## வவுனியாவில் மேலும் 116 பேருக்கு தொற்று

வவுனியா, செப். 06

வவுனியாவில் மேலும் 116 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 116 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

## சட்டவிரோத மின்கம்பியில் சிக்குண்டு வயோதிபர் பலி

குருநாகல், செப். 06

குருநாகல் மாவட்டம், மஹவ கடவலே பகுதியில் சட்டவிரோதமாகக் காணப்பட்ட மின்கம்பி ஒன்றில் சிக்குண்டு நபர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக குருநாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

## தனிமைப்படுத்தல் விதி மீறல்: ஒரே நாளில் 1,083 பேர் கைது!

கொழும்பு, செப். 06

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் மேலும் 1,083 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் காலை வெளியிட்டுள்ள காணொலிப் பதிவிலேயே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காகத் தொடர்ந்தும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்றும் (நேற்றுமுன்தினம்) முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (நேற்றுமுன்தினம்) 1,083 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 191 வாகனங்களும் தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல்



இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் 66 ஆயிரத்து 730 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாட்டு மக்கள் சிலர் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, சட்டத்துக்கு மதிப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன், கடந்த 24 மணிநேரத்தில் மேல் மாகாண எல்லையைக் கடக்க முற்பட்ட 568 வாகனங்களில் பயணித்த 1,054 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, மேல்மாகாணத்தின் 13 நுழைவாயில்களிலின் ஊடாக மேல்மாகாணத்தினுள் நுழைய முற்பட்ட 684 வாகனங்க ளில் பயணித்த 1,220 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்” - என்றார். (இ)

## போதைப்பொருளுடன் தெற்கு கடலில் கைதான வெளிநாட்டு பிரஜை ஒருவருக்கு கொரோனா

### ஏனைய அறுவரிடமும் விசாரணை

கொழும்பு, செப். 06

மீன்பிடிப் படகு ஒன்றில் 310 கோடி ரூபாய் பெறுமதியுடைய 336 கிலோகிராமுக்கும் மேற்பட்ட ஹெரோயின் போதைப்பொருளுடன் தெற்கு கடலில் கைதான வெளிநாட்டுப் பிரஜைகளில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. இந்தச் சுற்றிவளைப்பின் போது 07 பாகிஸ்தான் பிரஜைகள்கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டதன் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அவர் பொலிஸாரின் பாதுகாப்புடன் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பொலிஸார், கடற்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்த



இந்தச் சுற்றிவளைப்பின்போது 1,370 கிலோமீற்றர் தொலைவில் சர்வதேச கடல் எல்லையில் குறித்த படகுடன் எழுவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், தொற்றாளர் தவிர்ந்த ஏனைய அறுவரிடமும் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. (இ)

## யாழ்ப்பாணத்தில் 276 பேரை பலிகொண்டது கொரோனா

யாழ்ப்பாணம், செப். 06

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 276ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 5 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வேலணையைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவரும், நீர்வேலியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கீரிமலையைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 99 வயதுடைய பெண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அவரது சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

மந்திகை ஆதார மருத்துவமனை கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 77 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 276ஆக அதிகரித்துள்ளது. (இ - 03)

# உலகின் 30வீத உயிர்கள் அழிவடையும் ஆபத்தில்!

- இராட்சத பல்லி அதிஆபத்தில்
- அழிவின் விளிம்பில் சூரை மீன்
- 3இல் ஒரு காட்டுமரங்கள் அழிவு
- ஆபத்து பட்டியலில் யானைகளும்

பாரிஸ், செப். 06

காலநிலை மாற்றம், வாழ்விட இழப்பு காரணமாக உலகின் 30 சதவீதமான உயிரினங்கள் அழிவடையும் அபாயத்தில் உள்ளன. இதில் கொமோடோ ட்ராகன் எனப்படும் இராட்சத பல்லி முன்னிலையில் உள்ளதாக சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) தெரிவித்துள்ளது.



உலகின் இயற்கை வளத்தை பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இந்த அமைப்பு அழிவடையும் அபாயத்திலுள்ள உயிரினங்கள் சிவப்பு பட்டியலிட்டு வருகின்றது. நேற்று முன்தினம் சனிக்கிழமை அந்த அமைப்பு தனது "சிவப்பு பட்டியலை" புதுப்பித்தது.

இந்த அறிக்கையின்படி, காலநிலை மாற்றம், வாழ்விட இழப்பு காரணமாக உலகில் காணப்படும் ஒரு இலட்சத்து 39 ஆயிரம் உயிரினங்களில் 39 ஆயிரம் உயிரினங்கள் அழிவடைந்து விடும் அபாயத்தில் உள்ளன. இதேசமயம் 902 உயிரினங்கள் அழிவடைந்து விட்டன.

மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக சூரை (Tuna) வகை மீன்கள் அதிக ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. இவற்றை பாதுகாப்பது மிக அவசியமாகின்றது. 7 சூரை இனங்களில் நான்கு வகைகள் ஊக்குவிக்கக் கூடிய நிலையில் உள்ளன. தெற்கு ப்ளூபின் சூரை மீன் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. இதேபோல, அத்திலாந்திக்கின் மேற்கு ப்ளூபின் சூரை, இந்து சமுத்திரத்தின் யெலோபின் சூரை இனங்களும் அழிவை அண்மித்துள்ளன.

சுறா மீன் இனங்கள் 2014 ஆய்வின்போது மூன்றில் ஒருபங்கு அழிவை சந்தித்திருந்தது. ஆனால், இறைச்சி, மற்றும் துடுப்புகளுக்காக அவற்றை பிடித்தல், காலநிலை மாற்றம், கடல் மாசுபாடு காரணமாக இதன் அழிவு அபாயம் 37வீதமாக உயர்ந்துள்ளது.

சிவப்பு பட்டியலில் உலகின் மிகப்பெரிய பல்லியான கொமோடோ டிராகன், அதிக பாதிப்பை சந்தித்துள்ளது. காடுகள் அழிவடைதல் காரணமாக இவை வேகமாக அழிவை நோக்கி செல்கின்றன.

இதேபோல, காட்டு மரங்களில் மூன்றில் ஒன்று அழிவை எதிர் கொள்கின்றது. வேட்டையாடுதலால் யானைகளும் அழிவின் விளிம்புக்கு அருகில் செல்கின்றன. (ஐ)



# அமெரிக்க ஹெலி விபத்து; 5 கடற்படை மாலுமிகள் பலி!

சந்தியாகோ, செப். 06

அமெரிக்காவில் சந்தியாகோஅருகே கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி காணாமல் போன கடற்படையைச் சேர்ந்த 5 மாலுமிகளும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ். ஆபிரஹாம் லிங்கன் கப்பலுக்கு சொந்தமான MH-60S என்ற ஹெலிகொப்டர் கலிபோர்னியாவின் தெற்கு பகுதியில் பசுபிக் கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த போது இயந்திரக் கோளாறு காரணமாக விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் 5 மாலுமிகள் காணாமல் போயினர். இந்நிலையில் காணாமல் போன 5 மாலுமிகளும் உயிரிழந்து விட்டனர் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

72 மணி நேரத்திற்கும் மேலாக காணாமல் போன மாலுமிகளைத் மீட்பு பணியாளர்கள் தேடியபோதும் அவர்களைக் கண்டறிய முடியவில்லை என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

# உரிமையை வலியுறுத்தி பெண்கள் போராட்டம்!

## தலிபான்கள் தாக்குதல்



காபூல், செப். 06

ஆப்கானிஸ்தான் அரசியலில் பெண்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று நடத்தப்பட்ட போராட்டத்தில் தலிபான்கள் தாக்குதல் நடத்தியமை பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து ஆப்கான் ஊடகங்கள் தரப்பில், "தலிபான்கள் ஆட்சியில் பெண்களுக்கும் அரசியல் உரிமை வேண்டும்", என்பதை வலியுறுத்தி இளம் பெண்கள் காபூலில் போராட்டம் நடத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை அதிபர் மாளிகையை நோக்கி செல்லவிடாமல் தலிபான்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதில் சமூக செயல்பாட்டாளரான நர்கிஸ் என்பரை தலிபான்கள் தாக்கியதில் அவருக்கு தலையில் தாக்கினர். இதில் அவர் காயமடைந்தார். மேலும் பேரணியை கலைக்க வானை நோக்கி துப்பாக்கியால் தலிபான்கள் சுட்டனர் என்று செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் இத்தாக்குதலுக்கு ஆப்கானில் உள்ள பெண்கள் நல அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஐ)

## நாட்டை விட்டு வெளியேற

# பாகிஸ்தான் எல்லையில் குவியும் ஆப்கானியர்கள்!

காபூல், செப். 06

ஏராளமான ஆப்கானிஸ்தானியர்கள் பாகிஸ்தானுக்கு செல்லும் நோக்கில் டோர் ஹாம் எல்லையில் தொடர்ந்து குவிந்து வருகின்றனர். ஏராளமான லொறிகள் மற்றும் கொள்கலன் லொறிகள் மூலம் வந்து அவர்கள் இங்கு காத்திருக்கின்றனர்.



இந்நிலையில், பாகிஸ்தான் படையினர் மற்றும் தலிபான்கள் எல்லைகளில் பாதுகாப்பு பணிகளுக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் முழுமையாக தலிபான்களால் கைப்பற்றப்பட்டதை அடுத்து கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நிலைகொண்டிருந்த அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுப் படைகள் கடந்த ஒகஸ்ட் 31 ஆம் திகதி அங்கிருந்து முழுமையாக வெளியேறின. அத்துடன், மீட்புப் பணிகளும் முழுமையாக முடிவுக்கு வந்தன. இந்நிலையிலேயே அயல் நாடான பாகிஸ்தான் வழியாக நாட்டை விட்டு வெளியேற ஏராளமாக ஆப்கானிஸ்தான் மக்கள் எல்லையில் காத்திருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தான் சென்று அங்கிருந்து மேற்கு நாடுகளுக்கு பயணம் செய்யும் நோக்கத்தைக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது. (ஐ)

# போராளிகள் தாக்குதல் 600 தலிபான்கள் மரணம்

மொஸ்கோ, செப். 06

ஆப்கானிஸ்தானின் வடகிழக்கு மாகாணமான பஞ்ஷீரில் நடைபெற்ற மோதலில் 600 தலிபான்கள் கொல்லப்பட்டனர் என்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை தாம் உயிருடன் பிடித்துள்ளனர் எனவும் பஞ்ஷீர் போராளிகள் தெரிவித்தனர் என்று ரஷ்யாவின் ஸ்புட்னிக் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

பஞ்ஷீர் பகுதியை தாம் கைப்பற்றி விட்டோம் என்று தலிபான்கள் அறிவித்தனர். ஆனால், போர் தொடர்வதாக பஞ்ஷீர் போராளிகள் குழுவின் தலைவர் அஹ்மட் மசூத் அறிவித்திருந்தார். இந்த நிலையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது. பஞ்ஷீர் பகுதிகளில் போராளிகள் கண்ணி வெடி தாக்குதல்களை அதிகளவில் நடத்துவதால் தலிபான்கள் முன்னேறுவதில் சிக்கல் நிலவுகின்றது என்று கூறப்படுகின்றது. (ஐ)

# இரண்டாவது இனிங்ஸில் இந்தியா அபார ஆட்டம்!

லண்டன், செப். 06

ரோஹித் சர்மாவின் சதத்தால் இங்கிலாந்துக்கு எதிராக இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் இந்திய அணி 230 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய அணி தற்போது நான்காவது டெஸ்ட் போட்டியில் விளை யாடி வருகின்றது. கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் போட் டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 191 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 290 ஓட்டங்களைப் பெற்று 99 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. பதிலுக்கு இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இந்திய அணிக்கு தொடக்கம் கொடுத்த ரோஹித் சர்மா சதம் அடித்து வலுவான அடித்தளத்தை இட்டார்.

ராகுல் 46, புஜாரா 61, விராட் கோலி 44 என ஓரளவு பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால், நான்காம் நாளான நேற்று மதிய போசனத்திற்காக ஆட் டம் நிறுத்தப்பட்டபோது, 118 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 329 ஓட்டங்களை இந்திய அணி பெற்றது.

இதனால், இங்கிலாந்து அணியை விட இந்திய அணி 230 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. ரிஷப் பந்த் 16 ஓட்டங்களுடனும், தாகூர் 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ரொபின்சன், வோக்ஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்களை கைப்பற்றியிருந்தனர்.

இன்று போட்டியின் இறுதி நாளாகும். (ஐ)





மலன் அபார சதம்:

## இலங்கையை வீழ்த்தியது தென்னாபிரிக்கா அணி!

கொழும்பு, செப். 06

இலங்கை அணியை டக்வேர்த் லூயிஸ் முறையில் 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றது தென்னாபிரிக்க அணி. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலை வகிக்கின்றன.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது.

மழை காரணமாக 47 ஓவராக குறைக்கப்பட்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

47 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்த தென்னாபிரிக்க அணி 283 ஓட்டங்களைப் பெற்றது. இதில், தொடக்க வீரரான ஜன்னமன் மலன் 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 121 ஓட்டங்களை குவித்தார்.

அத்துடன், ஹென்றிக்ஸ் 51, ஹென்றிச் கிளசென் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் துஷ்மந்த சாமீர, சாமிக கருணாரத்ன ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 284 ஓட்டங்களைப் பெற்றால் என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி. 25 ஓவர்கள் நிறைவில் 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மீண்டும் மழை குறுக்கிட்டது.

இதனால், டக்வேர்த் லூயிஸ் முறையில் 41 ஓவர்களில் 265 ஓட்டங்கள் வெற்றி இலக்காக இலங்கை அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 36.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 197 ஓட்டங்களை மாத்திரமே இலங்கை அணி பெற்றது. இதனால், 67 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

ஆரம்ப வீரர்கள் துடுப்பாட்டத்தில் சொதப்பிய நிலையில், நான்காவது வீரராக இறங்கிய சாரித் அசலங்க 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 77 ஓட்டங்களையும், சாமிக கருணாரத்ன 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர். தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில் டப்ரைஸ் ஷம்ஸி 5 விக்கெட்டகளை கைப்பற்றினார். போட்டி நாயகனாக ஜன்னமன் மலன் தெரிவானார். (ஐ)



## ரவி சாஸ்திரிக்கு கொரோனா

லண்டன், செப். 06

இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவருடன் இருந்த அணி ஊழியர்கள் 3 பேர் கட்டாயத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வீரர்களுடன் பயோ பபுளில் இருந்தும் ரவி சாஸ்திரிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அவரின் 3 உதவியாளர்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ரவிசாஸ்திரிக்கு தொற்று ஏற்பட்டதையடுத்து, வீரர்கள் அனைவருக்கும் அன்ரிஜென் பரிசோதனை நடத்தப்பட்டது. இதில், யாருக்கும் தொற்று இல்லை என்று தெரிய வந்துள்ளது. இதனால், போட்டி வழமை போன்று நேற்று இடம்பெற்றது. (ஐ)



பெர்னாண்டஸ்

அமெரிக்க ஓப்பன்:

## ஆஷ்லே, ஒசாகா அதிர்ச்சி தோல்வி!

நியூயோர்க், செப். 06

முன்னிலை வீராங்கனைகளான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி, ஜப்பானின் நயோமி ஒசாகா ஆகியோர் அதிர்ச்சி தோல்வியடைந்தனர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில், நேற்று நடந்த மூன்றாவது சுற்றுப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டியும், அமெரிக்காவின் செல்பி ரோஜர்ஸூம் மோதினர்.

முதல் சுற்றை ரோஜர்ஸ் 6-2 என்ற கணக்கில் வெற்றி கொண்டார். அடுத்த சுற்றில் எழுச்சி கண்ட ஆஷ்லே 6-1 என்ற செற் கணக்கில் இரண்டாவது சுற்றைக் கைப்பற்றினார். வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் மூன்றாவது சுற்று கடுமையாக இருந்தது. இருவரின் ஆட்டத்திலும் ஆக்ரோஷம் வெளிப்பட்டது. இறுதியில் 7-6 (7-5) என்ற செற் கணக்கில் ரோஜர்ஸ் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோல நேற்று முன்தினம் நடந்த போட்டியில், ஒசாகவை 18 வயதான கனடாவின் பெர்னாண்டஸ் 5-7, 7-6(7-2),6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

## டிராவிட்டின் சாதனையை முறியடித்தார் ரோஹித்!

லண்டன், செப். 06

இந்திய அணியின் தொடக்க வீரர் ரோஹித் சர்மா ஓவல் டெஸ்ட்டில் சதம் அடித்ததன் மூலம், அந்த அணியின் முன்னாள் தலைவர் ராகுல் டிராவிட்டின் சாதனையை முறியடித்தார்.

லண்டன் ஓவல் மைதானத்தில் இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி நடந்து வருகிறது.

இதில் 2-வது இனிங்ஸில் இந்திய அணியின் தொடக்க வீரர் ரோஹித் சர்மா சதம் அடித்து 126 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் போட்டிகளில் 7 சதங்கள் அடித்த ரோஹித்தின் எட்டாவதும் - வெளிநாட்டில் பதிவான முதல் சதமும் இதுவாகும்.

இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதிகமான சதம் அடித்த இந்திய வீரர் எனும் பெருமையையும் ரோஹித் சர்மா பெற்றுள்ளார். இதற்கு முன்னர் ராகுல் டிராவிட் இங்கிலாந்து மண்ணில் 8 சதங்களைப் பதிவு செய்திருந்தார். அதை முறியடித்த ரோஹித் சர்மா 9ஆவது சதத்தை பதிவு செய்துள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்து மண்ணில் மட்டும் ரோஹித் சர்மா 9 சதங்களைப் பதிவு செய்துள்ளார். இங்கிலாந்து மண்ணில் அதிகமான சதங்களை அடித்தவர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மன் 11 சதங்களைப் பதிவு செய்துள்ளார். அவரின் சாதனையை முறியடிக்க ரோஹித் சர்மாவுக்கு இன்னும் இரு சதங்கள் தேவை.



# ஊரடங்கில் மதுபான விருந்து நடத்திய ஐவர் சிக்கினார்கள்!

குருநாகல், செப். 06

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் இந்தக் காலப்பகுதியில் மதுபான விருந்து நடத்திய ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருநாகலில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த மதுபான விருந்து நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, ஹோட்டல் சுற்றிவளைக்கப்பட்டபோது, ஐவர் கைதுசெய்யப்பட்டதுடன், சிலர் அங்கிருந்து தப்பிச் சென்றும் உள்ளனர்.

தப்பிச் சென்றவர்களைக் கைதுசெய்வதற்கு விசேட தேடுதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் குருநாகல் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், எதிர்வரும் 24ஆம் திகதி குருநாகல் நீதிமன்றத்தில் முன்னிலையாகு மாறும் உத்தரவிப்பட்டுள்ளது. (இ)

# கந்தப்பளையில் கஞ்சா வளர்த்த நால்வர் கைது

நுவரெலியா, செப். 06

நுவரெலியா மாவட்டம், கந்தப்பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெத்துன்கம மாவத்தையில், கஞ்சா செடிகளை வளர்த்த 4 இளைஞர்களைக் கந்தப்பளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கெமுனு மாவத்தை பகுதி யைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

கந்தப்பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த இளைஞர்களின் வீட்டுப் பகுதியைச் சுற்றிவளைத்த பொலிஸார், அங்கு தேடுதலில் ஈடுபட்டபோது, தண்ணீர் தாங்கி ஒன்றுக்கு அருகில் வளர்க்கப்பட்ட மூன்றரை அடி உயரமான இரண்டு கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞர்களை விசாரணைகளின் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கந்தப்பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# கொரோனா உடல்களை அடக்கம்செய்ய மேலும் இரண்டு இடங்கள் அடையாளம்

## இறுதி அனுமதி கிடைக்கவில்லை என்கிறார் கெஹலிய

கொழும்பு, செப்.06

**கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய மேலும் இரண்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.**



திருகோணமலை, புத்தளம் ஆகிய பகுதிகளில் சடலங்களை அடக்கம் செய்யக்கூடிய காணிகள் தொடர்பில் முன்மொழிவுகள் கிடைத்துள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், இந்தக் காணிகளைப் பயன்படுத்த இறுதி அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு பொருத்தமான காணிகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பிரதேச செயலாளர்கள், சுகாதார அதிகாரிகள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதிகாரிகளால் வழங்கப்படும் தகவல்களுக்கு அமைய, பொருத்தமான காணிகள் தெரிவு செய்யப்படும் என்று சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களில் 2 ஆயிரத்து 522 பேரின் சடலங்கள் மட்டக்களப்பு - ஓட்டமாவடி பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி மயானத்தில் மேலும் 300 சடலங்களைப் புதைப்பதற்கான காணி மாத்திரமே காணப்படுகின்றது என்றும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# அவசரகால சட்டம்மீது சபையில் இன்று விவாதம்

கொழும்பு, செப். 06

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த 30ஆம் திகதி அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான பிரகடனத்தை இன்று முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை விவாதித்து சபையில் அனுமதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்காக இந்த அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன.

பாராளுமன்றம் இன்று முற்பகல் 10 மணியளவில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது. அதன்பின்னர் அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரகடனம் மீது விவாதம் நடைபெறவுள்ளது. (இ)



# கொரோனா தொற்றால் மரணித்தவர்களுக்கு முகத்துவாரம் காளி கோயில் முன்பாக அஞ்சலி

கொழும்பு, செப். 06

கொரோனாவால் மரணித்த அனைத்து இலங்கையர்களுக்குமான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தமிழ் முற்போக்குக் கூட்டணியினதும் ஜனநாயக மக்கள் முன்னணியினதும் தலைவர் மனோ கணேசன் எம்.பியின் தலைமையில் கொழும்பு முகத்துவாரம் காளி கோயில் முன்பாக நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களான ஜி.விஷ்ணுகாந், சிவரஞ்சன், சிவகுமார், வசந்குமார் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும்கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ)

# வவுனியாவில் தடுப்பூசி பெறாத நால்வர் தொற்றால் உயிரிழப்பு

வவுனியா, செப். 06

வவுனியாவில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத நான்கு பேர் கொரோனாத் தொற்று காரணமாக ஒரே நாளில் மரணமடைந்தனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில் பலரும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கொரோனாத் தொற்று காரணமாக தடுப்பூசி எதனையும் பெற்றுக் கொள்ளாத 32 வயது இளைஞர் உட்பட நான்கு பேர் நேற்று முன்தினம் மரணமடைந்தனர்.

32 வயது இளைஞர் தவிர்ந்த ஏனைய மூவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். குறித்த நான்கு பேரினதும் சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)




# சீனாவிலிருந்து பெருமளவு தடுப்பூசிகள் இலங்கைக்கு

கொழும்பு, செப். 06

சீனாவிடமிருந்து இலங்கை அரசால் கொள்வனவு செய்யப்பட்ட மேலும் 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளின் முதலாவது தொகுதி நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட சரக்கு விமானத்தில் நேற்று அதிகாலை குறித்த தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

16 ஆயிரத்து 192 கிலோகிராம் நிறை கொண்ட 42 பெட்டிகள் இவ்வாறு முதல் தொகுதியாக நேற்றுக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதன் இரண்டாவது தொகுதி நேற்று நாட்டுக்குக் கிடைக்கப்பெறவுள்ளது. இலங்கையால் இதுவரையில் 2 கோடி 20 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டுள் ளன என்று இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் கடந்த வாரம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அறிவித்திருந்தது. (இ)

# அமைச்சுகளின் செலவீனங்களை குறைக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 06

அமைச்சுகளில் குறைக்கக் கூடிய செலவீனங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

குறைக்கக்கூடிய செலவீனங்கள் மற்றும் மீதப்படுத்த எதிர்பார்க்கப்படும் நிதி தொடர்பிலும் திறைசேரிக்குக் கூடிய விரைவில் அறிவிக்குமாறு நிதி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்று காரணமாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள நிலைமையின் மத்தியில் அரச எதிர்பார்க்கும் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதால், செலவீனங்களைக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், தற்போது ஆரம்பிக்க முடியாத வேலைத் திட்டங்கள், அமைச்சுகளின் புதிய கொள்வனவுகள், கட்டட நிர்மாணங்கள் மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சமீபத்தில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, அரசின் செலவீனங்களை மட்டுப்படுத்துவது தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் அமைச்சர்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. (இ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கேற்கும் ஊடகவியலாளர்களும் கொரோனா பரிசோதனை செய்து கொள்ள கலந்துக்கொள்ள முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 12.30 மணி வரையான காலப்பகுதியில் இவ்வாறு கொரோனா பரிசோதனைகள் மேற் கொள்ளப்படவுள் ளன.

இன்று திங்கட்கிழமை மற்றும் நாளை செவ்வாய்க்கிழமை ஆகிய தினங் களில் பாராளுமன்ற அமர்வுகள் இடம் பெறவுள்ள நிலையில், இவ்வாறு சுகாதார பிரிவினரால் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள் ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

## பருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவு கின்றது எனவும், சில கடை களுக்குக் கோதுமை மா வழங்கு வது கட்டுப்படுத்தப்பட்டுள் ளது எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

சீனிக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டிருந்தா லும், விதிக்கப்பட்ட மொத்த விலையில் சீனி வழங்கப்படாது என்றும், வழங்கல் மட்டுப் படுத்தப்படும் என்றும் மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இறக்குமதி நிறுவனங்கள் கோதுமை மாவின் விலையை அதி கரிக்கமாட்டோம் என்று ஒப் புக்கொண்டன என்று கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். (இ)

## உண்மையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற விருக்கும் ஐ. நா. மனித உரிமை கள் கூட்டத் தொடருக்குத் தமிழ் மக்களின் சார்பில் தமது நிலைப் பாட்டை தெளிவுபடுத்தும் அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்ப வுள்ளது. இந்த நிலையில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கை தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த மற்றைய இரண்டு பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகி யவை கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள தமிழ்க் கட்சிகள் தயாரித்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. இந்தச் செயல் மூலம் கூட்டமைப்பு பிளவுபட்டிருப்பது அம்பலமாகியுள்ளது என ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

இந்தப் பின்புலத்தில் நடந்த விட யங்களை இலங்கை தமிழ் அரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேரும் இன்று ஒன்றுகூடி, இது விடயத் தில் உண்மையில் நடந்தவை என்ன என்பதை தமிழ் மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும் எனத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழு தீர்மானித்துள் ளது.

குறுகிய ஓரிரு மணி நேர முன்னறி வித்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றுக் காலை 10 மணி முதல் இரண்டு மணி நேரம் அவசரமாக மெய்நிகர் வழியில் கூடியது.

கட்சித் தலைவர் மாவை சேனாதி ராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சி. வீ. கே. சிவஞானம், பொன். செல்வராசா, மருத்துவர் சத்திய லிங்கம், எம். ஏ. சுமந்திரன், சி. சிறிதரன், சே. குலநாயகம், த. கலையரசன், கி. துரைராஜசிங்கம் ஆகிய ஒன்பது பேர் பங்குபற்றினர். இரா.சம்பந்தனும், சட்டத்தரணி கே. வி. தவராசாவும் கலந்துகொள்ளவில்லை.

உண்மையில் நடந்தவை என்னவென் பதை தமிழ் அரசுக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்கள் கொழும்பில் இன்று ஒன்றுகூடி ஆராய்ந்து, எழுத்து வடிவத்தில் மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.(இ)

## ஜோர்ஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட வேலுப்பிள்ளை குமார் பஞ்சரட் ணம் நேற்று காலமானார்.

1936ஆம் ஆண்டு பிறந்த அவர், தபால் அதிபராக பணியாற்றியிருந்தார். 1994ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் பிரதான மொழிபெயர்ப்பாளராக செயல்பட்டி ருந்தார்.

இறுதிப் போர் காலத்தில் இராணுவத் தினரிடம் சரணடைந்தார். கோப்பாய் முதியோர் இல்லத்தில் வசித்து வந்த அவர் நேற்று காலமானார்.

ஜோர்ஜ் மாஸ்ரரின் மறைவுக்கு நோர்வே அரசின் சமாதான தூதுவராக செயல்பட்ட எரிக் சொல்ஹெய்ம் இரங்கல் தெரிவித்துள்ளார்.

"சமாதான பேச்சுக்களின்போது, நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களை சந்திக்கும் போதெல்லாம் எங்களுக்காக சிறந்த மொழிபெயர்ப்பாளராக ஜோர்ஜ் மாஸ்டர் பணியாற்றினார். அவர் மிகுந்த தமிழ் தேசப்பற்றாளர். சமாதானத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர். அவ ரின் ஆத்மா சாந்தியடையட்டும்", என்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதி வி ட்டுள்ளார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர், யாழ்ப் பாணம் சிறைச்சாலை யில் ஒரு வர் என் யாழ். மாவட்டத்தில் 16 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா மருத்துவ அதிகாரி பிரி வில் 16 பேரும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் 5 பேரும், வவுனியா பொது மருத்துவமனையில் 2 பேருமாக 23 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத் தப்பட்டனர்.

முல்லைத்தீவு பொது மருத்துவமனை யில் இருவர், மல்லாவி ஆதார மருத்துவ மனையில் 4 பேர், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் ஒருவர் என 7 பேரும், கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் 4 பேரும், மன்னார் பொது மருத்துவமனையில் 3 பேரும் தொற்றா ளர்களாக இனங்காணப்பட்டனர்.

தவிர, காங்கேசன்துறை கடற்படை முகாமில் 9 பேருக்கும், மன்னார் கடற் படை முகாமில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

## ஜெனிவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத தடைச்சட் டத்தை ரத்துச்செய்தல் போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. "தொற்று நோய்ப் பரவலுக்கு மத்தியிலும், உள் ளூர்ப் பொறிமுறை மூலமாக மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கை உறுதியாக இருந்துள்ளதுடன், குறிப் பிடத்தக்க முன்னேற்றத்தையும் ஏற் படுத்தியுள்ளது" எனவும் இதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

"ஆதாரங்களைச் சேகரிப்பதற்காக உருவாக்கப்படும் வெளிப்புற பொறி முறை ஒன்றை இலங்கை நிராகரிக்கின் றது" எனத் தெரிவித்துள்ள இந்த ஆவ ணத்தில், "சம்பந்தப்பட்ட நாட்டின் ஒப்புதலும், ஒத்துழைப்பும் இல்லாமல் இவ்வாறான வெளிப்புறப் பொறிமுறை யும் செயற்பாடுகளும் அரசியல்மயப் படுத்தப்பட்டதாக அமையும் என்பது டன், அதன் மனித உரிமை இலக்குகளை அடையமுடியாமலும் போய்விடும் என்பது சர்வதேச சமூகத்துக்குத் தெரி யும்" எனவும் இதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகும் போது, ஆணையாளரின் வாய்மூல அறிக்கை வெளியாகும். அதில் இலங்கை உட்பட மூன்று நாடுகளின் மனித உரிமை விவகா ரங்கள் தொடர்பில் அவர் அறிக்கையிட வுள்ளார்.

# மாகாண சபையை குழப்புவதில் சீ.வீ.கேயும் கவனம் செலுத்தினார்

## சிறீதரன் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 06

மாகாண சபையை சீராக நடத்த வில்லை என்பதற்கு சி. வி. விக்னேஸ் வரன் மட்டும் பொறுப்பாளியாக முடி யாது அதனைக் குழப்புவதில் பெரிய கவ னம் செலுத்துபவர்களில் ஒருவராக நிறைய அனுபவம் வாய்ந்த சீ. வீ. கே. சிவஞானமும் இருந்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சி முக்கியஸ் தருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித் துள்ளார்.

டான் தொலைக்காட்சியின் ஸ்பொட் லைட்டுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத் தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவு தொடர்பில் தொகுப்பா ளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

சீ. வீ. கே. சிவஞானம் மாகாண சபை தொடர்பிலான அந்தக் குழப்பங்களை கட்டுப்படுத்தியிருக்க முடியும். ஆனால் மாகாண சபை ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துமாறு அன்று இருந்த ஆளு நரிடம் கடிதம் கையளித்தவரே சிவ ஞானம்தான். உண்மையில் அவ்வாறு செய்திருக்கக்கூடாது. 17 உறுப்பினர் களும் ஆளுநரைச் சந்தித்து வடக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கலைக் கும்படி கோரியது எங்களுக்கு மக்கள் மத்தியில் பெரிய பலவீனத்தை ஏற் படுத்தியது. இவ்வாறான விடயம் எதுவும் தனக்குத் தெரியாது என்று இரா. சம்பந்தன் எனக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் தனக்குத் தெரியாது என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் தெரி வித்தார். இவ்வாறான விடயங்கள் எங்க ளுக்கு மக்கள் மத்தியில் பின்ன டைவை ஏற்படுத்தியிருந்தன என்பது உண்மை என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# வவுனியாவில் தொற்றால் நேற்று ஐவர் உயிரிழப்பு!

வவுனியா, செப். 06

வவுனியாவில் கோவிட் தொற்றல் நேற்று 5 பேர் உயிரிழந்தனர் என்று சுகா தாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கோவிட் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில் பலரும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு வருகின்ற னர். அத்துடன், இறப்புக்களும் அதி கரித்து வருகின்றன.

கோவிட் தொற்று காரணமாக மகாறம்பைக்குளத்தில் (வயது 77) பெண் ஒருவரும், தவசிகுளத்தில் (வயது 57) ஆண் ஒருவரும், சிறிநகரில் (வயது 77) பெண் ஒருவரும், பட்டாணிச்சூரில் (வயது 44) ஆண் ஒருவரும், தோணிக் கல்லில் (வயது 74) ஆண் ஒருவரும் என 5 பேர் மரணமடைந்தனர்.

மரணமடைந்த 5 பேரின் சடலங் களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்வதற்கு சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# அரசின் தவறான தீர்மானங்களால் சர்வதேசத்தால் இலங்கை புறக்கணிப்பு!

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

கொழும்பு, செப். 06

பொருளாதாரம், சுகாதாரம் ஆகிய இரு துறைகளும் தற்போது பேராபத் தில் உள்ளன. நாடும் நாட்டு மக்களும் சிறந்த பாதையை நோக்கி செல்ல வில்லை. தவறான தீர்மானங்களால் சர்வதேசம் இலங்கையை புறக்கணித்துள ளது. ஆகவே, குறுகியகால திட்டத்தின் ஊடாக நாடு எதிர்க்கொண்டுள்ள சவால் களை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத் திரமே வெற்றிகொள்ள முடியும். சுகா தார பாதுகாப்பு, பொருளாதார பாது காப்பு, அறிவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறை கள் ஊடாக "சிறப்பான இலங்கை"யை உருவாக்க முடியும் - என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் 75 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மெய்நிகர் வழியில் நேற்று உரையாற்றிய போதேவ அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நாட்டை அனைத்து துறைகளிலும் முன் னேற்றியது. ஆனால், இன்று நாட்டு மக்கள் முன்னேற்றகரமான பாதையில் பயணிக்கவில்லை. மக்களின் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள துடன், தேசிய பொருளாதாரமும் வீழ்ச்சி யடைந்துள்ளது.

கோவிட் -19 வைரஸ் தொற்று பரவல் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளதே தவிர குறைவடையவில்லை. தொற்று பரவல் தீவிரமடைந்துள்ளதால் இருபதாயிரம் தொடக்கம் முப்பதாயிரம் வரையிலான மரணங்கள் பதிவாகும் என மருத்துவ நிபுணர்கள் எதிர்வு கூறியுள் ளார்கள்.

மறுபுறம் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரண மாக பலர் தொழில்வாய்ப்புக் களை இழந்துள்ளார்கள். கடல்சார் பொருளா தாரமும், விவசாய பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன. கோவிட் தாக்கத்தினாலும், அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களினாலும் இன்று கல்வி துறை முழுமையாக வீழ்ச்சியடைந் துள்ளது. தவறான செயற்பாடுகளினால் சர்வதேசம் இலங்கையை புறக்கணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும், அரசியல் பேரழிவில் இருந்தும் நாட்டை பாதுகாப்பது பிரதான சவாலாக உள் ளன. இவ்விடயங்களுக்கு தீர்வு காணா விட்டால் எதிர்கால சந்ததியினர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வார்கள். வரலாற்று ரீதியில் ஐக்கிய தேசிய கட்சி பல சவால்களை எதிர்க் கொண்டு வெற் றிப் பெற்றுள்ளது. அதே போல் தற் பாது நாடு எதிர்கொண்டுள்ள சவாலை எதிர்க் கொள்ள தயாராகவுள்ளோம்.

குறுகிய கால செயல்திட்டத்தின் ஊடாக தற்போது நாடு எதிர்க் கொண் டுள்ள பொருளாதாரம் மற்றும் சுகாதார சவால்களை வெற்றிக் கொள்ள முடியும். அத்துடன் நீண்ட கால செயற்திட்டத் தின் ஊடாக 27ஆண்டுக்குள் சிறப்பான இலங்கையை எம்மால் நிச்சயம் உருவாக்க முடியும், என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# செப்.13 முதல் நாட்டில் ஊரடங்கை நீக்கலாம்

### மருத்துவ நிபுணர் பிரசன்ன



கொழும்பு, செப். 06

"நாட்டின் தற்போதைய சூழ் நிலையில் நாட்டை எதிர்வரும் 13ஆம் திகதி திறக்க முடியும் என நம்புகின்றேன்."

- இவ்வாறு அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் தலைவர் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்தார். செப்ரெம்பர் 13ஆம் திகதிக்கு பின்னரும் நாடு முடக் கப்பட வேண்டும் என மருத்து வர்கள் ஆலோசனை முன்வைத்துள்ளனர். இல்லை, திறக்க வேண்டும் எனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இது விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன வென ஊடகங் கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.(இ)

### சட்டவிரோதமான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள

# உணவுப்பொருட்களை நிவாரண விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குக

### அத்தியாவசிய சேவைகளுக்கான ஆணையாளர் பணிப்புரை

கொழும்பு, செப்.06

**சட்டவிரோதமான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு நிவாரண விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அத்தியாவசிய சேவைகளுக்கான ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல பணிப்புரை விடுத்துள்ளார்.**

பொலிஸ்மா அதிபர், அனைத்து மாவட்ட அரச அதிபர்கள், நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் மற்றும் உணவு ஆணையாளருக்குக் கடிதம் மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மறைத்து வைத்தல், அதிக விலைக்கு விற்பனை செய்தல் மற்றும் பொதுமக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்குதல் உள்ளிட்ட முறைகேடுகளை தடுக்கும் நோக்கில் ஜனாதிபதி, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் சரத்துக்கமைய, இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, அரசின் நிவாரண விலைக்கு அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலையைக் குறிப்பிட்டு சட்டவிரோதமான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள உணவுப் பொருட்களைப் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அத்தியாவசிய சேவைகளுக்கான ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல பணிப்புரை விடுத்துள்ளார். (இ)

### ஒட்சிசனில் தங்கியுள்ள

# கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சி

### ஊரடங்கு நன்மையளித்துள்ளது என்கிறது அரசு

கொழும்பு, செப். 06

மருத்துவ ஒட்சிசனில் தங்கியுள்ள கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளசுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதியில், சுகாதார ஆலோசனைகளைப் பொதுமக்கள் உரியவாறு பேணுவதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சுகாதார ஒழுங்கு விதிக ளைத் தொடர்ந்தும் பின்பற்றும் பட்சத்தில் நாட் டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் ஊர டங்கை மீறிச் செயல்படுவோருக்கு எதிராகக் கடுமையான நட வடிக்கைகளை முன்னெடுக்கு மாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளோம்" - என்றார். (இ)

# நியூசிலாந்து தாக்குதல்தாரியின் நண்பர்களிடம் விசாரணை

கொழும்பு, செப். 06

நியூசிலாந்தில் பல்பொருள் அங்காடி ஒன்றில் 6 பேரைக் கத்தியால் குத்தி காயப்படுத்திய இலங்கையருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்களிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நபர் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக அவரது நண்பர்களிடம் விசாரணை செய்து வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதனிடையே, குறித்த நப ருடன் தொடர்பை வைத்திருந்த 3 பேர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய இலங்கை யரான மொஹமட் சம் சுதீன் ஆதில் என்ற 32 வய துடைய சந்தேகநபர், ஒக்லாந்து நகரிலுள்ள பல் பொருள் அங்காடிக்குள் நுழைந்து அங்கிருந்த பலர் மீது கத்திக் குத்துத்தாக் குதலை முன்னெடுத்த போது, ஆறு பேர் காயமடைந்தனர்.

எனினும், நியூசிலாந்து பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில், சம்பவ இடத்திலேயே அவர் சுட்டுக்கொல்லப் பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடியைச் சேர்ந்த குறித்த நபர் 2011 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. (இ)







# மரண அறிவித்தல்



# வேலுப்பிள்ளை குமார் பஞ்சரட்ணம் (பஞ்சு)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 - 12 -1938 | 05 - 09 - 2021 |

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், யாழ். பருத்தித்துறை, வன்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குமார் பஞ்சரட்ணம் அவர்கள் நேற்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று கோப்பாய் லில்லி முதியோர் இல்லத்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற குமார் – மீனாட்சி தம்பதியரின் மூத்த புத்திரரும், செல்லதுரை – செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற தர்மசறோஜினி (ஓய்வுபெற்ற M.G.H.S ஆசிரியர் பருத்தித்துறை) அவர்களின் அன்புக் கணவரும், காயத்திரி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற நிமல் ஆகியோரின் அன்புத் தந்தையும், யுட் மமான்ஸ்(அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமனாரும், ஜஷ்றன், ஜெரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப. 4:00 மணியளவில் அன்னை வேளாங்கன்னி ஆலயம் வவுனிக்குளம் எனும் முகவரியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**காயத்திரி (மகள்) -**
**+61478794375**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
- உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
- சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்பட காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா - சமுதாய வைத்தியர்
எஸ்.நித்தியானந்தா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் - பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## சிவ தொலைக்காட்சி (ஓம் ரிவி)

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு